பக்கங்கள்: எட்டு

பொது சன நூலகம்
-3 JAN
பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2027 மார்கழி 19 வெள்ளிக்கிழமை (03-01-1997) UTHAYAN A Lively National Tamil Daily நிறி: 38

## அதிகாரப் பரவலாக்கல் யோசனை:

# தெரிவுக் குழுவில் கருத்திணக்கம் காண்பதற்கு அரசு கடும் முயற்சி!

## கட்சி தலைவர்கள் மாநாடு கூடுகிறது

கொழும்பு, ஜனவரி 3

அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான விசேஷ நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் கருத்திணக்கம் ஏற்படுத்தும் இறுதி நேர முயற்சியில் அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இதன் ஓர் அங்கமாக எதிர்வரும் 9 ஆம், 10 ஆம் திகதிகளில் தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் மாநாட்டை நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் கூட்டுகிறார்.

அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக எதிர்வரும் மார்ச் மாதத்துக்கு முன்னர் தெரிவுக்குழுவில் கருத்து ஒருமைப்பாட்டைக் கண்டுவிட அரசாங்கம் தன்னாலான சகல முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளதாகவும் —

அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளில் 70 சதவீதம் தொடர்பாக ஏற்கனவே தெரிவுக்குழுவில் இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்தார்.

அதிகாரப் பரவலாக்கல்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கிளைமோர் கண்ணிக்கு நேற்று 6 இராணுவம் 3 பொதுமக்கள் பலி

### திருநெல்வேலியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜன. 3

திருநெல்வேலியில் நேற்றுக் காலை ஏழு மணியளவில் கிளைமோர் கண்ணிவெடி வெடித்ததில் ஆறு படையினரும், மூன்று பொதுமக்களும் பலியானார்கள். பொதுமக்கள் நால்வர் காயமடைந்தார்கள்.

யாழ்ப்பாணம் — பலாலி வீதியில், திருநெல்வேலி தபால் பெட்டியடிப் பகுதியில், இந்தக் கண்ணி வெடிச் சம்பவம் இடம்பெற்றது.

சம்பவம் குறித்துத் தெரிய வருவதாவது:-

இராணுவத்தினர் உழவு இயந்திரம் ஒன்றில் சென்று கொண்டிருந்த வேளை கண்ணிவெடிக்குண்டு வெடித்தது.

அதில் பயணம்செய்த படையினரில் ஆறு பேர் கொல்லப்பட்டனர்.

படையினர் வழமையான ரோந்துச் சேவையில் ஈடுபட்டிருந்த வேளையிலேயே விடுதலைப் புலிகள் கிளைமோர் கண்ணி வெடியை இயக்கி குண்டை வெடிக்க வைத்ததாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

கிளைமோர் வெடித்த வேளையில் அவ் வழியால் சென்று கொண்டிருந்த பொதுமக்களில் மூவர் கொல்லப்பட்டனர். மற்றும் நால்வர் காயமுற்றனர்.

கொலையுண்ட மூன்று பொதுமக்களில் இரண்டு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் கட்டளை நிலையத்தை இலக்கு வைத்தே படை நடவடிக்கை

### சிரேஷ்ட இராணுவ அதிகாரி தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 3

விடுதலைப் புலிகளின் கிழக்கு கட்டளை நிலையத்தை இலக்கு வைத்தே கிழக்கில் தற்சமயம் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று சிரேஷ்ட இராணுவ அதிகாரி தெரிவித்ததாக 'த ஐலண்ட்' செய்தி வெளியிட்டுள்ளது.

மட்டக்களப்பு, அம்பாறை, பொலன்னறுவை தெற்கு ஆகிய பகுதிகளை அண்டியதாக உள்ள தொப்பிக்கல காட்டுக்குள்ளேயே விடுதலைப் புலிகளின் கிழக்கு கட்டளை நிலையம் அமைந்துள்ளது.

'பேருட்' என அழைக்கப்படும் அந்தக் கட்டளை நிலையம் சகல வசதிகளும் கொண்டதாக உள்ளது. அதற்கே கிழக்கு பிராந்திய தளபதி கருணா பொறுப்பாக இருக்கிறார்.

இத்தகைய தளத்தைக் கைப்பற்றுவதே கிழக்கில் ஆரம்பிக்கப்பட்ட 'றிவிஜெய' (சூரிய வெற்றி) இராணுவ நடவடிக்கையின் இலக்கு என்று தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் அப்பத்திரிகை தெரிவித்தது.

## கிழக்கில் ஹெலி சேதம்

தற்பொழுது கிழக்கில் நடைபெறும் ''றிவி ஜெய'' இராணுவ நடவடிக்கையின் போது, படையினரின் ஹெலிக் கொப்டர் ஒன்று புலிகளின் தாக்குதலுக்கு உள்ளானது.

செங்கலடி வீதியில் கரடியனாறுப் பிரதேசத்தின் தென் பகுதியில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

ஹெலிக் கொப்டரைச் செலுத்திய விமானி அதனை மகா ஓயா விமானத் தளத்தில் அவசரமாகத் தரை இறக்கினார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தாக்குதலில் புலிகளின் முக்கிய தளம் ஒன்று அழிக்கப்பட்டதாகவும் — 20 புலிகள் உறுப்பினர் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

### முச்சந்தி முரளி



இனி எவர் தலைவராய் வந்தாலும் ராவின் றெக்கோட்டுகளை உடைக்கேலாது பாருங்கோ......!

### புலி எனக் கூறி கொள்ளை முயற்சி

கொழும்பு, ஜன. 3

தாம் விடுதலைப் புலிகள் உறுப்பினர் என்று கூறிக் கொண்டு துப்பாக்கி முனையில் வாகனம் ஒன்றைக் கொள்ளையிட முயன்ற ஒருவர் சம்மாந்துறையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் சம்மாந்துறைப் பகுதியில் ஏற்கனவே பல நகைக் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டவர் என்பது விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

இவரினால் கொள்ளையடிக்கப்பட்ட மூன்று ''ஆட்டோ'க்களைப் பொலீஸார் மீட்டுள்ளனர். (இ-5)

## காங்கிரஸ் நாடாளுமன்றக் குழு புதிய தலைவர் தெரிவு இன்று

### சீதாராம் கேசரிக்கு வாய்ப்பு அதிகம்

புதுடில்லி, ஜன. 3

காங்கிரஸ் நாடாளுமன்றக் குழு தனது புதிய தலைவரைத் தெரிவு செய்வதற்காக இன்று கூடுகிறது.

நாடாளுமன்றக் குழுத் தலைவர் பற்றி உறுப்பினர்களின் கருத்துக்களை அறிவதற்காகக் காங்கிரஸ் கட்சி அமைத்துள்ள 5 உறுப்பினர் குழு இன்று காலை 9.00 மணியிலிருந்து 3.00 மணி வரை கூடுகிறது.

உட்கட்சி ஜனநாயகத்தை ஆதரிக்கும் குழு ராஜேஸ் பைலட்டை ஆதரிப்பது என முடிவு செய்துள்ளது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

### இலங்கை கடற்படையை கண்டித்து

## இராமேஸ்வரத்தில் நேற்று மீனவர்கள் உண்ணாவிரதம்

லண்டன், ஜன. 3

இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் கொல்லப்படுவதை ஆட்சேபித்து இராமேஸ்வரத்தில் சுமார் 500 மீனவர்கள் நேற்று உண்ணாவிரதப் போராட்டம் தொடங்கினர்.

மீனவர்கள் தாக்கப்படுவது கடந்த 15 ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றது. சென்ற 2 மாதங்களில் மட்டும் எட்டு மீனவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 11 பேர் காயமடைந்துள்ளனர். 39 மீனவர்கள் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். எண்ணற்ற படகுகள் சேதமாக்கப்பட்டன என்று உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னின்று நடத்தும் இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் டி. எஸ். முடையப்பன் தெரி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் பாடசாலைகளை ஆரம்பிக்க முடியாத நிலைமை

### அகதிகள் தங்கி உள்ளனர்

கொழும்பு, ஜன. 3

நாட்டிலுள்ள அரசாங்கப் பாடசாலைகள் நேற்று முதலாம் தவணைக்காக ஆரம்பித்த போதிலும் வவுனியாவிலுள்ள பல பாடசாலைகள் நேற்று ஆரம்பிக்கவில்லை.

இதற்குக் காரணம் வவுனியாவில் பாடசாலைகளில் தமிழ் அகதிகள் தங்க வைக்கப்பட்டிருப்பதே ஆகும்.

இந்த அகதிகளை அப்புறப்படுத்தி அல்லது வேறு இடங்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NEW SCIENCE ACADEMY
&
NEW SCIENCE HALL
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

99 A/L

சனி, ஞாயிறு வகுப்புக்கள்
நடைபெறுகின்றன.

கணிதப்பிரிவு - சனி, ஞாயிறு 7. 30 - 1. 00
உயிரியல்பிரிவு - சனி, ஞாயிறு 8. 00 - 2. 00

(44475)

## ஆச்சிரம நிகழ்ச்சி

வடமராட்சி, ஜன. 3
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை வெள்ளிக்கிழமை தோறும் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தும் சமய நிகழ்ச்சிகளில் —

இன்றுமு.ப.10.30 மணிக்கு ந. ஜெயதர்ஷினி, ந. ஜெய பாரதி சகோதரிகளின் இன்னிசை இடம் பெறும்.

(அ-173)

## எழுதுமட்டுவாழ் கமநல சேவை நிலைய கிளை

தென்மராட்சி, ஜன. 3
சாவகச்சேரி கமநல சேவை நிலையத்தின் கிளை எழுதுமட்டுவாழில் தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம் பிள்ளையினால் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

எழுதுமட்டுவாழ் பிரிவு கிராம அலுவலர் பொ. நவரத்தினராசா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் சாவகச்சேரி கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் செல்வி அ. கயல்விழி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சாவகச்சேரி பிரதேசத்தில் அமைக்கப்பட்ட பத்தாவது கிளை நிலையம் இது எனவும் —

இக்கிளை நிலையம் ஊடாக இப்பகுதி விவசாயிகளுக்கு விதை நெல், உரம் ஆகியவை வழங்கப்படவுள்ளதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

(இ-117)

விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

O/L
Day Class ஆரம்பம்: 6-1-97 (8.30-2.00)
Evening Class (3.00-5.00)
Sat. Sunday Class (8.30-2.00)

விஞ்ஞானம்: திரு. இரா. செல்வவடிவேல்
10 ஆம், 9 ஆம், 8 ஆம், 7 ஆம், 6 ஆம்
வகுப்புகள்
புதிய பிரிவு ஆரம்பம்: 06 - 01 - 1997
(44466)

## யாழ்ப்பாணம் வணிகர் கழகம் விடுக்கும் முக்கிய அறிவித்தல்

பொங்கலை முன்னிட்டு எதிர்வரும் சனி, ஞாயிறு விடுமுறை நாள்களில் சகல வர்த்தக நிலையங்களும் திறந்து வியாபாரம் செய்யலாம். யாழ் / மாநகர சபை எல்லைக்குள் வியாபாரம் செய்யும் சகல வர்த்தகர்களும், கராஜ் உரிமையாளர்களும், கடைச்சல் பட்டடை உரிமையாளர்களும், மண்எண்ணெய் வியாபாரிகளும் உங்கள் நலன் கருதி 20 - 1 - 97 க்கு முன் சங்க உறுப்பினராகச் சேரவேண்டும் அல்லது அதனால் வரும் பாதிப்புக்கு சங்கம் பொறுப்பாளியல்ல.

நிர்வாகம்,
யாழ் வணிகர் கழகம்.

(44471)

## யாழ். பல்கலைக்கழக விவசாயபீட மாணவர்களுக்கான உதவிப்பணம், மகாபொல புலமைப் பரிசில் உபவேந்தர் நலநிதியம் ஆகிய கொடுப்பனவுகள்

மேற்படி கொடுப்பனவுகளை யாழ். மாவட்டத்தில் தங்கியுள்ள விவசாயபீட மாணவர்கள் உடனடியாக வந்து யாழ். பல்கலைக்கழக நிதிக்கிளையில் 03 - 01 - 1997, 06 - 01 - 1997 ஆகிய தினங்களில் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேற்படி கொடுப்பனவுகள் வன்னியில் அமைந்துள்ள விவசாய பீடத்திற்கு எடுத்துச் செல்லப்பட இருப்பதால் மேற்குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளுக்குப் பின்னர் அவற்றை யாழ். பல்கலைக்கழக நிதிக்கிளையில் பெற்றுக் கொள்ள முடியாதிருக்கும்.

பதிவாளர்.

யாழ். பல்கலைக்கழகம்.
02 - 01 - 1997 (சி/ 3848)

## கண்ணீர் அஞ்சலி

### சின்னப்பு சிவக்கொழுந்து

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி ப. சண்முகரத்தினம் அவர்களின்

தந்தையார் சின்னப்பு சிவக்கொழுந்து காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தி அடையவும் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

(சி/3850)

A/L 99
கலை, வர்த்தகம்
ஆரம்பம்: இன்று
வெள்ளி பி. ப. 5. 00
SHAMROCK
யா/ ஈச்சமோட்டை வீதி.
(44465)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி பரமேஸ்வரி சண்முகரத்தினம்
அவர்களின் தந்தையார்

### சின்னப்பு சிவக்கொழுந்து

அவர்கள் காலமாகியதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்,
பழைய மாணவர் சங்கத்தினர்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

(சி/ 3851)

## 31ஆம் நாள் நினைவலைகள்



### திருமதி நாகேந்திரம் செல்லம்மா

தோற்றம்: 21—11—1923
மறைவு: 03—12—1996

அன்பின் சிகரமாய் அன்பாலும் பண்பாலும் எமை அரவணைத்து வளர்த்த தெய்வமே! உங்கள நினைவு எங்கள் மனதில் என்றும் நீங்காது நிலைத்திருக்கும் தாயே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய நாம் இறைவனை வேண்டுகின்றோம்.

தங்கை, மைத்துனர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சோதிவேம்படி,
மானிப்பாய்.

(44463)

உடன் தேவை

பேக்கறி வேலையில் நன்கு அனுபவமுள்ள போறணை வேலைகாரர், மேசை வேலைகாரர் உடன் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்:

மலாயன் பேக்ஹவுஸ்,
ஜொய்சி பேக்ஹவுஸ்,
55, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.
[44457]

BOSCO
INSTITUTE
25, Racca Road,
Jaffna.

A/L 99
கணித, விஞ்ஞான
வகுப்புகள்

விலங்கியல்:
யாழ். முன்னணி ஆசிரியர்
தாவரவியல்:
திரு. அன்ரன்
பௌதிகவியல்:
ஸ்பெல்மன்
இரசாயனவியல்
எட்வேட்
சிவத்திரன்
தூய/ பிரயோகம்:
மகேஸ்வரன்
ஆரம்பம்: 04.01.1997
பிற்பகல் 3.00 மணி
(44469)

## மரண அறிவித்தல்

### சின்னப்பு சிவக்கொழுந்து

தாவடியைச் சேர்ந்த சின்னப்பு சிவக்கொழுந்து 2 - 1 - 1997 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற பொன்னம்மா — சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும், திருமதி அன்னலட்சுமி தம்பிராசா (இளைப்பாறிய ஆசிரியை), திருமதி சரஸ்வதி இராசரத்தினம் (ஆசிரியை, லண்டன்), செல்வரத்தினம் (ஜேர்மனி), தருமராசா (பிரான்ஸ்), செல்வராசா (வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலை), திருமதி பரமேஸ்வரி சண்முகரத்தினம் (ஆசிரியை, கொக்குவில் இந்துக் கல்லூரி), திருமதி கமலேஸ்வரி ஜெகராசசிங்கம், திருமதி இராசேஸ்வரி இந்திரன், திருமதி தவமலர் சீவரத்தினம் (ஆயுர்வேத வைத்தியர், சட்டைவேலி), ஆனந்தகிருஷ்ணன், காலஞ்சென்ற சச்சிதானந்தம் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சிவபாலன் (கனடா), கருணபாலன் (கனடா), கலையரசி (ஆசிரியை, நவாலி மகா வித்தியாலயம்), கலாறஜனி, வித்தியகலா (எஞ்சினியர், லண்டன்), ராஜன், றஞ்சித், சுனித்தா, மயூரன், சசிகரன், சுகிகரன், ரோகிணி (நீர்ப்பாசனத் திணைக்களம்), குமுதினி, மதிவதனி, சிவப்பிரியன், தர்சனா, பபியா ஆகியோரின் அன்புப் பேரனும், கார்த்திகாவின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (2-1-97) பிற்பகல் 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுத் தகனக்கிரியைக்காகப் பூதவுடல் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி பரமேஸ்வரி சண்முகரத்தினம்
(ஆசிரியை, கொ. இ. கல்லூரி)

தாவடி,
கொக்குவில். (சி/3849)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆற்றலுள்ள இளம் ஆசிரியர்களை உருவாக்கவே கல்விக் கல்லூரிகள்

## வவுனியா கல்விக் கல்லூரி தமிழருக்கு ஒரு வரப்பிரசாதம்

**வட மாகாணத்துக்கென நிறுவப்பட்ட வவுனியா கல்விக் கல்லூரியின் பயன்பாடுகள், அதன் செயற்பாடுகள், அதன் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து அந்தக் கல்லூரியின் பீடாதிபதி செ. அழகரத்தினம் விளக்குகின்றார்.**

**அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த பீடாதிபதி உதயனுக்கு பேட்டி ஒன்றை அளித்திருந்தார்.**

கேள்வி: கல்விக் கல்லூரிகளின் தன்மை, பயன்பாடுகள் யாவை?

பதில்: இலங்கையில் 1985 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட கல்விக்கல்லூரிகள் தேசிய கல்வி நிறுவனத்தின் வழிகாட்டலுடன், கல்வி, உயர் கல்வி அமைச்சின் கல்விக் கல்லூரிகள் கிளையின் பிரதம ஆணையாளரின் கீழ் இயங்கி வருகின்றன. இன்று வரை 11 கல்விக் கல்லூரிகள் அமைக்கப்பட்டுள்ளன, சியனே கல்விக்கல்லூரி, ஊவா கல்விக் கல்லூரி, ஹாபிற்றிகம கல்விக்கல்லூரி மகாவலி கல்விக்கல்லூரி, நில்வள கல்விக் கல்லூரி, பஸ்துன்ரட்ட கல்விக் கல்லூரி, சாரிபுத்த கல்விக் கல்லூரி என்பன ஆரம்பத்தில் அமைக்கப்பட்டவை. சாரிபுத்த கல்விக்கல்லூரி தனியே பௌத்த பிக்கு ஆசிரியர்களுக்காகவும், பஸ்துன்ரட்ட கல்விக்கல்லூரி ஆங்கில ஆசிரியர் பயிற்சிக்காகவும் அமைக்கப்பட்டவை. மேற்கூறிய ஏழு கல்விக் கல்லூரிகளில் பஸ்துன்ரட்ட நீங்கலாக ஏனையவைகளில் சிங்கள மொழியிலேயே போதனை இடம் பெறுகின்றது. ஸ்ரீபாத கல்விக்கல்லூரி, அட்டாளைச்சேனைக் கல்விக் கல்லூரி, வவுனியா கல்விக் கல்லூரி, மட்டக்களப்பு கல்விக் கல்லூரிகள் பின்னர் ஆரம்பமானவை.

இதில் ஸ்ரீபாத, வவுனியா கல்விக் கல்லூரிகளில் 75 சதவீதம் தமிழ் மொழி மூலமும், 25 சதவீதம் சிங்கள மொழி மூலமும் போதனைகள் நடைபெறுகின்றன. அட்டாளைச்சேனைக் கல்விக்கல்லூரி முற்று முழுதாக முஸ்லிம் மாணவர்களுக்கான தமிழ் மொழி மூல கல்லூரி ஆகும். மட்டக்களப்பு கல்விக்கல்லூரி தமிழ் மொழி மூலமானது. ஆசிரியர் கல்வியில் ஆசிரிய பயிற்சியை முறையாக வழங்குவதன் அவசியம் காரணமாக இக்கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டன.

வகுப்பறையில் ஆசிரியர் முதன்முதலில் பிரவேசிக்கும் போது பூரண ஆயத்தமும், மனவுறுதியும், அதற்கான அடிப்படைப் பயிற்சிகளும் பெற்றவராக, தன்னம்பிக்கையுடன் பயன்படு திறனுள்ளவராக இருக்க வேண்டுமென்பதற்கேற்ப ஆசிரியர்களுக்கு முன்சேவைப்பயிற்சி அளிப்பதை நோக்கமாகக் கொண்டே —

அதற்கான முறையான செயற்றிட்டங்கள், பயிற்சி நெறிகளை அடிப்படையாக வைத்தே — கல்விக் கல்லூரிகள் இயங்குகின்றன.

30 அல்லது 35 வருட காலத்துக்கு ஆசிரிய கல்வித் துறையில் தாக்குப் பிடிக்கக் கூடிய இளம் நபர்களை (25 வயதுக்கு உட்பட்ட திருமணமாகாத, ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையில் குறைந்தது 3 பாடங்கள் சித்திபெற்ற தகுதிகள் கொண்டவர்களை) ஆசிரியர்களாக ஆக்குவதற்காக அடிப்படை முறையான பயிற்சிகளை மூன்று வருட காலத்துக்கு அளிக்கின்ற வேலைத் திட்டத்தைக் கொண்டன. இக்கல்விக் கல்லூரிகள் ஆரம்ப, விஞ்ஞான, கணித, உடற்கல்வி, மனையியல், ஆங்கில பௌத்த ஆசிரியர்கள் முழுமையான பயிற்சியுடன் இக்கல்விக் கல்லூரிகளிலிருந்து வெளியேறுகின்றனர்.

எக்காலத்திலும் எப்பகுதியிலும் தயங்காது கடமையாற்றும் மனோதிடமுள்ளவர்களாக ஆசிரியர் சமுதாயத்தை உருவாக்கும் பணியில் இக்கல்லூரிகள் ஈடுபட்டுள்ளன. அரசியல் செல்வாக்குக்கு அப்பாற்பட்ட ஆசிரியர்கள் இதன்மூலம் உருவாக உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### கல்விக் கல்லூரி அனுமதி எந்த அடிப்படையில்

கேள்வி: பல்கலைக்கழகத்தின் அனுமதி பெறாத சகலருக்கும் கல்விக் கல்லூரியில் அனுமதி கிடைக்குமா?

பதில்: பல்கலைக்கழகத்துக்குஅனுமதி பெறாத சகலருக்கும் அனுமதி வழங்கக் கூடியதாக கல்விக் கல்லூரிகளின் தற்போதைய தன்மை இல்லை. எனினும் பல்கலைக் கழகத்தில் ஓரிரண்டு புள்ளிகளால் பின்தள்ளப்பட்ட, அனுமதி மறுக்கப்பட்ட கணிசமான தொகையினருக்கு, நாட்டின் ஆசிரிய தேவைக்கேற்ப ஆசிரியர்களாகப் பயிற்றுவதற்கு அனுமதி அளிக்கக் கூடியனவாக இவை இருக்கின்றன.

கேள்வி: எந்த எந்தத் துறைகளில் போதனை நடைபெறுகின்றது?

பதில்: வவுனியாக் கல்விக் கல்லூரியில் ஆரம்ப கல்வித் துறை, உடற்கல்வித்துறை, விஞ்ஞான கல்வித்துறை என்பவற்றில் தமிழிலும் சிங்களத்திலும் போதனைகள் இடம்பெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு கல்விக்கல்லூரியில் ஆரம்ப கல்வித்துறை கணித கல்வித்துறையில் தமிழ்மொழியில் போதனை நடைபெறுகின்றது.

ஸ்ரீபாத கல்விக்கல்லூரியில் விசேடமாக மலைநாட்டுத் தமிழர்கள், சிங்களவர்களுக்காக ஆரம்பக்கல்வி, விஞ்ஞானம், கணிதம் ஆகிய துறைகளிலும்

—அட்டாளைச் சேனைக் கல்விக்கல்லூரியில் தமிழ் மொழி மூலம் முஸ்லிம்மாணவர்களுக்கு மட்டும் உடற்கல்வி, ஆரம்பக்கல்வி விஞ்ஞானம், கணிதத்துறைகளிலும் — போதனை வழங்கப்படுகிறது.

எனினும் எதிர்காலத்தில் வவுனியா கல்விக் கல்லூரியிலும் ஏனைய கல்விக்கல்லூரிகளிலும் இன்னும் பலதுறைகளில் விரிவாக்கம் செய்து போதனை வழங்குதற்கான வசதிகள் செய்து கொள்ளப்படவுள்ளன என்பதைக் கூற முடியும்.

### வேலை வாய்ப்பு

கேள்வி: இக்கல்லூரிகளில் பயிற்சி பெற்றவர்களுக்கு வேலைவாய்ப்புஉடன்கிடைக்கிறதா?

பதில்: இக்கல்லூரியில் அனுமதி பெற்றவுடன் இருவருட வதிவிடப்பயிற்சிக் காலத்தில் மாதாந்தம் ரூபா 1000 மாணவருக்கு வழங்கப்படுகிறது. ஒரு வருடத்திற்கு பாடசாலைகளில் இணைக்கப்பட்டு பயிற்சி பெறும் காலத்தில் உணவுத் தேவைக்காக ஆயிரத்து ஐந்நூறு ரூபா வழங்கப்படுகிறது. பயிற்சியைப் பூரணப்படுத்தி சித்தி பெற்றவர்களுக்கு கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பட்டத்துடன் ஆசிரிய நியமனம் உடனடியாக வழங்கப்படுகிறது. உத்தியோகம் பெறுவது உறுதிப்படுத்தப்படுவதால் தற்போது பல்கலைக்கழகத்துக்குச் சென்று பட்டம் பெற்றுபதவி பெறாத நிலையிலும் பார்க்க இக்கல்விக் கல்லூரிக்குச் செல்வது நல்லது வசதியானது, வாய்ப்பானது என்று மாணவர்கள் கருதி கல்லூரி அனுமதிக்கு ஏராளமானோர் விண்ணப்பிக்கும் நிலையை அவதானிக்கலாம்.

கேள்வி: கல்விக் கல்லூரிக்கும், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கும் இடையிலுள்ள வேறுபாடு என்ன?

பதில்: ஆசிரிய கலாசாலைகள் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிப்பவை. இப்பயிற்சி மூலம் சேவையில் உள்ளவர்களுக்கு பயிற்சி வழங்கப்படுகிறது. ஆசிரியர் என்றமுறையில் வயதுக் கட்டுப்பாடற்று, திருமணம்ஆனவர், ஆகாதவரான ஆசிரியர்கள்எல்லோருக்கும்பயிற்சி வழங்கப்படுகின்றது. கல்விக் கல்லூரி சேவை முன் (Pre Service) பயிற்சியை வழங்குபவை. ஜி. சீ. ஈ. உயர்தர தகைமையுடைய சில நிபந்தனைக்குட்பட்ட 25 வயதுக்குக்குறைந்த, திருமணமாகாதவர்களை அனுமதித்துப் பயிற்சி வழங்குபவை. பயிற்சிக் காலத்தில் அவர்கள் திருமணம் செய்யவோ, வேறு பயிற்சி நெறிகளைப் பின்பற்றவோ அனுமதிக்கப்பட மாட்டார்கள். ஆசிரிய கலாசாலைப் பயிற்சிகளை விட மிகத்திட்டமிடப்பட்ட மேற்பார்வைக்கு உட்படுத்தப்பட்ட முறையில் முதல் இரண்டு வருட காலத்தில் கல்லூரியில் உள்ளகப் பயிற்சியும், அடுத்த ஒரு வருடத்தில் வெளியில் பாடசாலை ஒன்றில் கட்டுறு (சேவை) பயிற்சியும் வழங்கப்படுகின்றது.

தொடர்ச்சியான மேற்பார்வைமுறை இடம்பெறும். இதைவிட ''பாடசாலையும் சமூகமும்'' என்ற ஒரு செயற்றிட்டம் மிக நுட்பமாகச் செயற்படுத்தப்பட்டு பயிற்சி ஆசிரியர்களைச் சமூகத்துடன் இணைக்கும் வேலைத்திட்டமாக அமைக்கப்படுகிறது.

எந்தப் பயிற்சியை விசேடமாகப் பெறும் ஆசிரியராக இருப்பினும் ஓர் ஆசிரியர் என்ற முறையில் அவருக்கு உடற்கல்வி, வாழ்க்கைத் திறன், கவின்கலைத் துறைகளிலும் அடிப்படைப் பயிற்சி கட்டாயமாக வழங்கப்படுகின்றமை கல்விக்கல்லூரிகளில் சிறப்பானவை ஆகும். அத்தோடு தாய்மொழி, ஆங்கிலம், சிங்களம் போன்றவற்றிலும் அடிப்படைத் தேர்ச்சி பெறுதற்கான ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன.

### ஆசிரியர்கள் விண்ணப்பிக்க முடியாது

கேள்வி: பயிற்சிபெற ஆசிரியர்களும் கல்விக் கல்லூரிகளுக்கு விண்ணப்பிக்க முடியுமா?

பதில்: இல்லை. விண்ணப்பிக்கத் தகுதியான வர்கள் யார் யார் என்பதும் அதற்கான தகைமைகள் என்ன என்பதும் விண்ணப்பங்கள் கோரப்படும்போது அரச வர்த்தமானியிலும் பத்திரிகைகளிலும் அறிவிக்கப்படும்.

(1) விண்ணப்பதாரர்கள் ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சையில் குறைந்தது 3 பாடங்களில் சித்தி அடைந்திருக்க வேண்டும். ஆரம்ப கல்வித் துறைக்கு என்றால் தமிழ் மொழிப் பாடத்தில் சித்தி. விஞ்ஞானத்துறைக்கு என்றால் விஞ்ஞான பாடங்களில் சித்தி. கணித நெறிக்கென்றால் கணித பாடத்தில் சித்தி பெற்றிருக்கவேண்டும். உடற்கல்வித்துறைக்கென்றால் குறைந்தது மாவட்ட மட்டத்தில் ஏதாவது விளையாட்டு நிகழ்ச்சியில் முதலாம் இடம் பெற்றிருக்கவேண்டும். ஆங்கில பாடநெறிக்கென்றால் குறைந்தது உயர்தரப் பரீட்சை சித்தியுடன் ஜி.சி.ஈ. (சா / த) ஆங்கில பாடத்தில் மிகத் திறமைச் சித்தி (D) பெற்றிருக்கவேண்டும்.

(II) தொழிலில் ஈடுபட்டுள்ள எவரும் விண்ணப்பிக்க இயலாது.

(III) திருமணமானவர்கள் விண்ணப்பிக்க முடியாது.

(IV) 25 வயதுக்கு மேற்படாதிருத்தல்வேண்டும்.

### தமிழ் மாணவர்கள் பயன் பெற்றனரா?

கேள்வி: தமிழர்களுக்கென்று அமைக்கப்பட்ட வவுனியா கல்விக் கல்லூரியில் தமிழ் மாணவர்கள் பயன் பெற்றனரா?

பதில்: வவுனியா கல்விக் கல்லூரி முற்று முழுதாக தமிழர்களுக்கென்று அமைக்கப்படவில்லை என்பதை முதலில் குறிப்பிடுதல்வேண்டும். 75 சதவீதம் தமிழ்மொழி மாணவரும், 25 சதவீதம் சிங்கள மொழி மாணவரும் சேர்க்கப்பட்டு பயிற்சி வழங்குவதாகவே இது உள்ளது. தமிழ்மொழி மாணவர் என்னும்போது தமிழரும் முஸ்லிம்களும் இதில் சேர்க்கப்படுவர் என்பதும் உண்மை. இதனால் 100 சதவீத தமிழ் மாணவர் பயன் பெறுவதற்கான வாய்ப்பு இல்லை என்றே கூறலாம். குறிப்பாக உடற்கல்வித்துறைக்கு மாணவர்களை அனுமதிக்கும் போது வடக்கு — கிழக்கில் மாகாண மட்டத்தில் மற்றும் தேசிய மட்டத்தில் கலந்து கொள்ளும் வாய்ப்பு தமிழ் மாணவர்களுக்கு குறைவாக இருந்தமையால் — இருப்பதால் — இத்துறையில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடம்பெற்ற தமிழ் மாணவர்களுக்கு அனுமதித் தேர்வில் போட்டி போட்டு இடம்பெறும் வாய்ப்பு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தேசிய, மாகாண மட்டத்தில் முதலாம், இரண்டாம் இடங்களைப்பெற்ற முஸ்லிம் மாணவர்கள் கூடுதலாக வவுனியாக் கல்லூரியில் இடத்தைப் பெறுவதற்கு வாய்ப்புகள் இம்முறை அதிகரித்துள்ளன. இதனால் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடம்பெற்ற மாணவர்களை அனுமதிப்பதில் வாய்ப்புக் குறைந்துள்ளது.

### கல்விக் கல்லூரி ஊழியர் நிலைமை

கேள்வி:- கல்விக் கல்லூரி ஊழியர்களுக்குச் சகல வசதிகளும் கிடைக்கின்றனவா?

பதில்:- சகல வசதிகளும் என்பதில் சற்று சிந்திக்க வேண்டியுள்ளது. எமது கல்லூரியைப் பொறுத்தவரையில் கல்வி சார்ந்த, கல்வி சாராத ஊழியர்களுக்கு அடிப்படை வசதிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. எனினும் வீட்டு வசதிகளைப் பொறுத்தவரை எல்லோருக்கும் வழங்க முடியாத நிலையுண்டு. இதற்கான வசதிகளை எதிர்காலத்தில் செய்வதற்கான திட்டங்கள் அமைச்சு மட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதைவிட அவர்களது சம்பளம், மற்றைய கொடுப்பனவுகள் போன்றவற்றில் பிரச்சினைகள் எதுவும் இல்லை. சகல வசதிகளும் செய்யப்படுதல் வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு கிடையாது. ஆனால் அதனைச் செய்வதில் தற்போதைய காலகட்டத்தில் கஷ்டங்கள் சிலவுள்ளன என்பதையும் மறுக்கவியலாது.

கேள்வி:- ஒவ்வொரு வருடமும் இவ்வளவு மாணவருக்கு பயிற்சி அளிப்பது என்று இலக்கு உண்டா?

பதில்:- ஆம் இதுவரை வவுனியா கல்விக் கல்லூரியைப் பொறுத்தவரை சில வசதியீனங்கள் இருந்தமையால் மாணவர்களுக்கு குறைவாகவே அனுமதி வழங்கப்பட்டது. தற்போது தண்ணீர்ப்பிரச்சினை, மின்சாரப் பிரச்சினை, இடவசதிப் பிரச்சினைகள் பெருமளவு தீர்க்கப்பட்டுள்ளமையால் வருடத்துக்கு 250 மாணவர்கள் என்ற வகையில் அனுமதிக்கும் இலக்கு உண்டு. இது வருடாவருடம் ஆசிரியத்தேவையை அனுசரித்து— அமையவிருக்கும் பாட நெறிகளைப் பொறுத்து— தீர்மானிக்கப்படும்.

எனவே 1998இல் இருந்து வவுனியா கல்விக் கல்லூரியில் மொத்தம் 500 மாணவர்கள் (250 பேர் இரண்டாம் வருட மாணவர்கள், 250 பேர் முதலாம் வருட மாணவர்கள்) இடம்பெறுவர்.

கேள்வி:- வவுனியா கல்விக் கல்லூரி ஏதாவது பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றதா?

பதில்:- புதிதாக அமைக்கப்பட்டுள்ள கல்லூரி என்ற வகையில் சில குறைநிறைகள் இல்லாமலில்லை. குடிநீர்ப்பிரச்சினை ஓரளவு தீர்க்கப்பட்ட நிலை. இதேநேரம், சரியான முறையில் திட்டமிடப்படாததால்— மேற்பார்வை செய்யப்படாததால்— கட்டடங்களில் குறைபாடுகள் காணப்படுகின்றன. கட்டட வெடிப்புகள், மழைகாலத்தில் ஒழுக்கு, நிலம் ஊறுதல் போன்ற பிரச்சினைகள் இருந்து வருகின்றன. கறையான்புற்றுக்கள் வளர்தல், கல்லூரி நிலம் துப்புரவு செய்யப்படாத நிலை என்பன உண்டு.

கல்வி அபிவிருத்தியைப் பொறுத்த வரையில் போதிய விரிவுரையாளர்கள் குறிப்பாக சங்கீதம், நடனம், சித்திரம் போன்றவற்றுக்கும் ஆரம்பக்கல்விக்கும் தேவையாக இருந்து வருகிறது. கட்டட மேற்பார்வையாளர், லிகிதர், பண்டகசாலைப் பொறுப்பாளர் போன்றோர் போதியளவு நியமனம் பெறாமை போன்ற சில பிரச்சினைகளையும் கல்லூரி எதிர்நோக்குகின்றது. இவை காலப்போக்கில் நிவர்த்தி செய்யப்படுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மாணவர்களின் உணவுத் தேவைக்கான பணமாக மாதாந்தம் கொடுக்கப்படும் ரூபா ஆயிரம் தற்போதைய விலைவாசி உயர்வுக்குப் போதியதாக இல்லை. இதனால் மாணவர்கள் தமது உணவுத்தேவையைப் பூர்த்தி செய்வதில் சிரமங்கள் உண்டு. கூடுதலாகச் செலவு ஏற்படுவ

(6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பிறிமா இன பேட்டுக் கோழிக் குஞ்சு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: R. S. K பண்ணை, முருகபதி, உடுவில். இன்று பெற்றுக்கொள்ளலாம். (44449)

### தேவை

வீவா, கோர்லிக்ஸ், ஜாம் (திருகுமூடி) போத்தல்கள் மூடியுடன் தேவை. ரேஸ்ட் லைன் இன்டஸ்றீஸ் (தனி) லிமிட், ஆடியபாதம் வீதி, (கேணியடி) திருநெல்வேலி. (44422)

### அக்கரைச் சீமையில்

28-12-96 இரவு வானொலியில் 'வீடு' நாடகம் கேட்டீர்களா? சொல்லுக்குச் சொல் கதை சொல்லும் அந்த நாடகத்தை எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நாவல். ரூபா 25, பூபாலசிங்கம் புத்தகசாலை. (44447)

### மணமகள் தேவை

வவுனியாவில் மில்லில் முகாமையாளராக தொழில் பார்ப்பவருக்கு 41 வயது, இந்து மணமகனுக்கு நல்ல குணமுள்ள மணமகள் தேவை. சாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளவும். ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம், இல.158, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (44442)

நற்குணம் மிக்க தீய பழக்கம் இல்லாத தாரம் இழந்த 36 வயது மணமகனுக்கு மணமகள் தேவை. வெளிநாட்டில் இருப்பவர் விரும்பத்தக்கது. தாரம் இழந்தவர்களும் கடித மூலம் சாதகம் முழுமையான பெண்ணின் விவரங்களுடன் விண்ணப்பிக்கலாம். ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம், கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (44453)

இந்து நற்குடும்பம் வயது 31, செவ்வாய்க் குற்றமுள்ள அரசாங்க உத்தியோகம் பார்ப்பவர் படித்த அழகான மணமகள் தேவை. தென்மராட்சி, வடமராட்சி விரும்பத்தக்கது. சாதகம் மற்றும் முழு விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். இல. 574, மே/பா உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். (44435)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**விவசாயபீடம்**
**கிளிநொச்சி**
**கல்வியாண்டு 1995/96**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாயபீடத்தின் **1995/96** ஆம் ஆண்டுக்கான கல்வியாண்டு எதிர்வரும் **3-3-1997** (திங்கட்கிழமை) கரிப்பட்டமுறிப்பு, (முல்லைத்தீவு மாவட்டம்) என்னுமிடத்தில் ஆரம்பமாகும். விவசாயபீட மாணவர்கள் யாவரும் மேற்குறிப்பிட்ட திகதிக்கு முன் பீடாதிபதியை கரிப்பட்ட முறிப்பில் சந்திக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**-- பதிவாளர்.**

(சி-3847)

## கண்ணீர் அஞ்சலி

மக்கள் வங்கி, கிளிநொச்சி முகாமையாளரும்,
முன்னாள் மக்கள் வங்கி ஊர்காவற்றுறை
முகாமையாளருமாகிய

### திருவாளர் A. இராசபூபாலசிங்கம்

அவர்களின் திடீர் மரணச் செய்திகேட்டு மிகவும் மனம் வருந்துகிறோம்.

அன்னாரின் இழப்பால் துயருறும் அவரின் குடும்பத்தினர், வங்கியாளர், நண்பர்கள் ஆகியோருடன் நாமும் பங்குகொள்கிறோம்.

சாந்தி, சாந்தி, சாந்தி!

மக்கள் வங்கி ஊர்காவற்றுறை - **முகாமையாளரும், சக ஊழியர்களும்.**

[44456]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 15 — 08 — 1917

மறைவு: 04 — 12 — 1996

### திருமதி சபாபதி செல்லம்மா

(கோண்டாவில்)

அன்பின் அணிகலமாய் பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்த் திகழ்ந்து, எம்மை வளர்த்து ஆளாக்கிய அன்புத் தெய்வமே! நாள்கள் முப்பத்தொன்று சென்றாலும் உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சைவிட்டு என்றும் நீங்காது. உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நன்றிநவிலல்:** அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து, ஊர்வலத்தில் பங்கு கொண்டோருக்கும், உதவிகள் புரிந்தோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் எமது நன்றிகள்.

**மகன், மருமகள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.**

தகவல்: வே. ச. சின்னையா,
மிசன் பாடசாலை வீதி,
கோண்டாவில்.

(44460)

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு: 14 — 02 — 1926

உதிர்வு: 04 — 12 — 1996

### திருமதி சின்னத்தம்பி சின்னத்தங்கச்சி (நாகம்மா)

எனது மனைவியின் இறுதியாத்திரையில் பங்குபற்றியும், எங்களுக்கு ஆறுதல் வழங்கியும், மற்றும் சகல வசதிகளையும் அன்புடன் நல்கிய அனைவருக்கும் நாம் நன்றி கூறுவதோடு இன்று (03 – 01 – 1997) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

என்றும் நீங்காத நினைவுடன் வாழும்:

**அன்புக்கணவன், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

கட்டைப்புளியடி,
அல்வாய் மேற்கு,
அல்வாய்.

(44418)

## SPOKEN ENGLISH WITH GRAMMAR

(2 மாத தீவிர பயிற்சி நெறி)

- ★ தினசரி வகுப்புகள்
- ★ நவீன முறையில் இலகுவாக கற்பிக்கப்படும்.
- ★ ஆங்கில மொழியை பூரணமாக கற்கலாம்.
- ★ பல்கலைக்கழக மாணவர்க்கும் — உத்தியோகம் பார்ப்போருக்கும் சனி — ஞாயிறு வகுப்புகள்.

**SYLLABUS**

- ★ GRAMMAR
- ★ READING
- ★ VOCABULARY
- ★ ETIQUETTE (Manners)
- ★ 1000 EXERCISES
- ★ WRITING
- ★ CONVERSATION

**LECTURES by: Mr. A. RAJAGOPALAN**

ஆரம்பம்; **06 - 01 - 1997 (திங்கள்)**
நேரில் தொடர்பு கொண்டு விவரம் அறியலாம்.

**BITSMANS INSTITUTES**
**MANIPAY.**

(44462)

## முதலாம் வருட நினைவஞ்சலி



மலர்வு: 22 — 07 — 1940

உதிர்வு: 03 — 01 — 1996

### அமரர் தம்பு கந்தையா

(குரும்பசிட்டி — தெல்லிப்பழை)

மெய்வருத்தம் பாராது அயராது உழைத்து, எம் குலம் தழைக்க வைத்துவிட்டு, இறைவனுடன் சங்கமமாகி விட்ட இவரது ஆன்ம சாந்திக்காக அனுதினமும் இறைவனை வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்;
**மாமன், மாமி, இரத்தினம் - பிள்ளை கண்டுகுடும்பம்.**

தற்போதைய முகவரி:
பொன்னம்பலம் வீதி,
மானிப்பாய்.

(44444)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணுறவு: 22 — 10 — 1943

விண்ணுறவு: 26 — 12 — 1994

### அமரர் முத்தையா திருநாவுக்கரசு

(B. A., S. L. A. S.)

(உதவித்தேர்தல் ஆணையாளர், புத்தளம்)

திதி: **03 - 01 - 1997**

என்றும் எம் இதயக் கோயிலில் ஒளிரும்
உயிரான குல விளக்கே!
ஆண்டிரண்டு சென்றிடினும் ஆறாது
உங்கள் நினைவலைகள்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**மனைவி, பிள்ளைகள்.**

ஐயனார் வீதி,
பருத்தித்துறை.

(44458)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹெப்ரோனில் 'இஸ்ரேல்' சிப்பாய் கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு

## 1 பலஸ்தீனர் பலி; 11 பேர் காயம்

ஜெருஸலம், ஜன. 3
மேற்குக்கரை நகரான ஹெப்ரோனில் இஸ்ரேலிய படைவீரர் ஒருவர் பலஸ்தீன மக்கள் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட சம்பவத்தில் ஒரு பலஸ்தீனர் கொல்லப்பட்டார். 11 பேர் காயமடைந்தனர்.

அந்தப்படைவீரர் தனது துப்பாக்கியிலிருந்த ரவைகள் முடியும்வரை சுட்டார் எனவும் —

பின்னர் சக படைவீரர்களால் அவர் கைது செய்யப்பட்டார் எனவும் — செய்திகள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவம் இடம்பெற்ற போதும் ஹெப்ரோனில் இருந்து இஸ்ரேல் வெளியேறுவது தொடர்பான பேச்சுவார்த்தைகளில் இஸ்ரேலிய, பலஸ்தீன சிரேஷ்ட பிரதிநிதிகள் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

''ஹெப்ரோன் நகர் பலஸ்தீனவிடுதலை அமைப்பிடம் கையளிக்கப்படுவதை சீர்குலைக்கும் முகமாகவே தான் பலஸ்தீனர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக'' அந்த யூத படைவீரர் தெரிவித்தார்.

4000 ஆண்டுகளுக்கு முன்னர் விவிலிய ஆபிரஹாம் என்பவர் யூதர்களுக்கென இந்த நகரை வாங்கினார் எனவும் அவர் கூறினார்.

அதே சமயம் பலஸ்தீனர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கப்படும் என தீவிரவாத இஸ்லாமியக் குழுவான 'ஹமாஸ்' தெரிவித்துள்ளது.

ஹெப்ரோனில் இஸ்ரேலிய படைவீரர் நடத்திய துப்பாக்கிச்சூட்டை அமெரிக்க அதிபர் கிளின்ரன் கண்டித்துள்ளார்.

பலஸ்தீன நிர்வாகத்திடம் உடனடியாக அந்த நகரம் ஒப்படைக்கப்படவேண்டும் என்பதையே இந்த வன்செயல் எடுத்துக்காட்டுவதாக வெள்ளை மாளிகை அறிக்கை தெரிவிக்கிறது.

ஜனாதிபதி கிளின்ரன் பலஸ்தீன அதிபர் யாஸிர் அரபாத்துடன் தொலைபேசியில் தொடர்பகொண்டு வருத்தம் தெரிவித்தார்.

(இ-10)

# மண்டேலா இருந்த சிறை பொதுமக்கள் பார்வைக்கு!

ஜொகனஸ்பேர்க், ஜன. 3
விடுதலைப் போராட்ட நாள்களில் தென் ஆபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலா 18 வருடகாலம் சிறைவைக்கப்பட்டிருந்த றொபோன் தீவிலுள்ள சிறைச்சாலை புத்தாண்டிலிருந்து பொது மக்கள் பார்வைக்காக த்திறந்து விடப்பட்டுள்ளது.

உலகில் மிகவும் கடுமையான, கொடுமையான சிறைச்சாலைகளில் ஒன்றாக இது கருதப்பட்டது.

புத்தாண்டன்று 300 பேர் இந்த தீவுச் சிறைச்சலையைப் பார்க்க அனுமதிக்கப்பட்டனர்.

'' இங்குதான் எங்கள் சுதந்திரம் தொடங்கியது. எங்கள் தாத்தா நெல்சன் மண்டேலா விடுதலைக்கான நெடும் பயணத்தில் முதல் அடி எடுத்துவைத்த இடம் இது'' என சிறையைப் பார்க்கச் சென்ற ஒரு இளம் பெண் தெரிவித்தார்.

''இப்படி ஒரு கொடும் சிறையில் 18 ஆண்டுகள் வாழ்ந்த பின்பும் பழிவாங்கும் வெறி எதுவும் இல்லாமல் புன்னகையோடு எங்கள் தலைவர் நெல்சன் மண்டேலா வெளியே வந்தார் என்பதை எண்ணும் போது நெஞ்சம் நெகிழ்கிறது'' என ஒரு தாயார் தெரிவித்தார். (இ-10)

# கங்கை நதி நீர்ப்பகிர்வு ஒப்பந்தம் அமுலுக்கு வந்தது

புதுடில்லி, ஜன. 3
இந்தியாவுக்கும் பங்களாதேஷுக்கும் இடையிலான கங்கை நதி நீர்ப்பகிர்வு ஒப்பந்தம் இம் மாதம் முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வந்துள்ளது.

45 ஆண்டு காலமாக இருந்து வந்த பிரச்சினைக்கு இந்த ஒப்பந்தத்தின் மூலம் தீர்வு ஏற்பட்டுள்ளது. 30 ஆண்டுகளுக்கு இந்த ஒப்பந்தம் அமுலில் இருக்கும்.

நீர் பகிர்வுச் செயற்பாடுகளை இரு தரப்பு அதிகாரிகளும் கடந்த புதனன்று நேரில் பார்வையிட்டனர்.

(இ-10)

# லிபியாவில் 8 பேருக்கு மரண தண்டனை!

அமெரிக்காவுக்காக வேவு பார்த்த குற்றத்தின் பேரில் 8 பேருக்கு லிபியா மரண தண்டனை விதித்துள்ளது.

இவர்களில் 6 பேர் இராணுவ உயர் அதிகாரிகள் ஆவர். இருவர் பொதுமக்கள். இவர்கள் இராணுவத் தகவல்களை அமெரிக்காவுக்கு வழங்கியதாக லிபியத் தொலைக்காட்சி தெரிவித்தது.

இவர்களில் இராணுவ அதிகாரிகளான அறுவரும் சுட்டுக் கொல்லப்படுவார்கள் எனவும், பொதுமக்கள் இருவரும் தூக்கிலிடப்படுவார்கள் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.
(இ-10)

# உலக அரங்கில்

## புறூண்டியில் மோசநிலைமை!

வத்திக்கான், ஜன. 3
புறூண்டி அகதிமுகாம்களில் போதிய கழிவறை வசதிகள், மருத்துவ வசதிகள் இன்மையால் நாளொன்றிற்கு 7 அல்லது 8 பேர் கொலரா, மலேரியா போன்ற நோய்களுக்குப் பலியாவதாக அங்கு தொண்டர் பணியில் ஈடுபட்டுள்ள அருட்சகோதரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

புறூண்டி இராணுவத்துக்கும் ஹூட்டு இனத் தீவிரவாதிகளுக்கும் இடையில் இடம்பெற்றுவரும் சண்டையாலும் —

அண்டை நாடுகள் அந்த நாட்டின் மீது விதித்துள்ள பொருளாதாரத் தடைகளால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளாலும் —

அகதிகளுக்கு உணவும் மருந்துகளும் வழங்க முடியவில்லை என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-5)

# காஸ்ட்ரோ அல்லது யெல்ட்ஸின் மத்தியஸ்தம் செய்ய வேண்டும்

## பெரு போராளிகள் கோரிக்கை

லீமா, ஜன. 3
பெரு நாட்டு பணயக்கைதிகள் நெருக்கடி தீவிரமடைந்து வருகிறது. ''உயிரைத் தியாகம் செய்ய நாம் தயாராகிவிட்டோம்'' எனப்போராளிகள் அறிவித்துள்ளனர்.

கியூபா அதிபர் பிடல் காஸ்ட்ரோ அல்லது ரஷ்ய அதிபர் பொறிஸ் யெல்ட்ஸின் ஆகியோரை நடுநிலைப் பேச்சாளர்களாக ஏற்கப் போராளிகள் முன்வந்துள்ளனர்.

நேற்றுக்காலை நல்லெண்ண அடையாளமாக மேலும் 7 பணயக் கைதிகளைப்போராளிகள் விடுவித்தனர்.

ஆனால் பெரு அதிபர் அல்பேட்டோ பூஜிமோரி அரசு போராளிகளின் கோரிக்கைகளுக்கு இணங்க மறுத்து வருகிறது. (இ-10)

## கூட்டணி விழும்

''காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவராக சீதாராம்கேசரி தெரிவு செய்யப்படின் ஆளும் கூட்டணி விரைவில் உடையும்.''

இப்படி ஜனதாதளத் தலைவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

குறுகிய சீர்திருத்தம் பற்றி கம்யூனிஸ்ட் கட்சி மாறுபட்ட கருத்தைக் கொண்டிருப்பதால் கூட்டணி ஆட்சி தாக்குப் பிடிக்காது என மார்க்சிய கம்யூனிஸ்ட் தலைவர் ஜோதிபாசு தெரிவித்தார். (இ-10)

### கிழக்கு ஜேர்மனியில்

# கடும் குளிரால் பாதிக்கப்பட்ட சட்டவிரோத குடியேற்றக்காரர்

கிழக்கு ஜேர்மனியில் கடும் குளிரினால் பாதிக்கப்பட்ட 16 சட்டவிரோத குடியேற்றக்காரர்கள் அதிகாரிகளிடம் சரணடைந்துள்ளார்கள்.

இந்த 16 பேரில் நான்கு பேர் 18 வயதுக்குட்பட்டவர்கள் என்றும் கால்களும் கைகளும் மிக மோசமாக குளிரினால் பாதிக்கப்பட்ட நிலையில் இவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவர்களில் 15 பேர் பங்களாதேஷ் நாட்டவர்கள் ஒருவர் ஈராக்கை சேர்ந்தவர். (இ-5)

# சமாதானத்தின் - அபிவிருத்தியின் ஆண்டாக புத்தாண்டு அமையட்டும்

## இராணுவ வட்டாரங்கள் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 3
''1997 ஆம் ஆண்டு சமாதானத்துக்கும், அபிவிருத்திக்குமான ஆண்டாக அமையட்டும்.''

புத்தாண்டு தினத்தை முன்னிட்டு இராணுவ வட்டாரங்கள் விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கை வருமாறு:

1997ஆம் ஆண்டு பிறந்துள்ளது. இந்த ஆண்டை யாழ். குடாநாட்டின் சமாதானத்துக்கும், அபிவிருத்திக்குமரிய ஆண்டாகக் கருத முடியும்.

இப்பிரதேசத்தில் தற்போது நிலவி வரும் சமாதானமான சூழ்நிலையை மேலும் உறுதிப்படுத்தியவாறு நிரந்தர சமாதானமொன்றை இப்பிரதேசத்தில் நிலைநாட்டுவதற்கு, யாழ்ப்பாண அபிவிருத்தியைக் கருதி மேற்கொள்ளப்பட வேண்டிய பாரிய திட்டங்கள் தொடர்பாக அரசாங்கத்தினால் திட்டமிடப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாடு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த நாள்களில், அவர்களினால் செயற்படுத்தப்பட்ட அழிவுகார நிர்வாகத்தினால், யாழ். மக்களின் சமூகப் பொருளாதார அபிவிருத்தி முற்றாகத் தடுக்கப்பட்டுள்ளது மட்டுமல்லாது, புலிகள் இயக்கத்தின் நிர்வாகத்துடன் விருப்பின்றியேனும் தொடர்பு கொளள வேண்டிய நிலை ஏற்பட்டது.

அதாவது புலிகளின் நிர்வாகத்தை மேற்கொள்வதற்காக பொதுமக்களிடம் வரி, கப்பம், நிதி என்ற பெயர்களில் பணமும் தங்கமும் மட்டுமல்லாது, மக்களிடமிருந்த பொருள்கள், உபகரணங்களும் கடத்தப்பட்டன.

இதனால், அபிவிருத்தி நடவடிக்கைகளின் முன்னோடிகளான விவசாயிகள், மீனவர்கள். ஊக்கமின்றிப் போனதுடன், அவர்களின் ஒரே எதிர்பார்ப்பாக இருந்தது அன்றாடம் வாழ்வதற்காக ஏதாவதொன்றைத் தேடிக் கொள்வதே ஆகும்.

பாடுபட்டுழைத்த வருமானம் எல்லாம் பயங்கரவாதிகளுக்கு அள்ளிக் கொடுப்பதைவிட கஷ்டப்படாதிருப்பதே சிறந்ததென எண்ணினர்.

ஆனால் தற்போதைய யாழ். மக்கள் பயங்கரவாதப் பிடியில் இருந்து தப்பித்துக் கொண்டுள்ளனர். அவர்கள் இன்று சுதந்திரமாகத் தமது ஜீவனோபாய வழிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

எப்போதும் சுறுசுறுப்பான ஆர்வமுள்ள மக்களான அவர்கள் ஒருபோதும் மற்றவர்களின் பராமரிப்பைப் பெற விரும்பாததால், தமது வியர்வையைப் பயன்படுத்தி மீண்டும் தலைதூக்குகின்றனர்.

இடம்பெயர்ந்த பின்னர் மீளக்குடியமர்த்தும் போது முதலில் அவர்களுக்குத் தேவையான பொருள்களை அரசாங்கம் விநியோகித்ததுடன், புனர்நிர்மாண, புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. அதேபோல் அடிப்படை மனிதத்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அடிப்படை வளத்தைப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### கப்பல்பயண நாள்களில்

# கூடுதல் பஸ்சேவையை நடத்துமாறு கோரிக்கை

தென்மராட்சி, ஜன. 3
கப்பல் பயண சேவை நடைபெறும் நாள்களில் காலை வேளையில் கூடுதல் பஸ்சேவைகளை கொடிகாமத்திலிருந்து நடத்துமாறு சாவகச்சேரி பகுதி மக்கள் வட பிராந்தியப் போக்குவரத்துச் சபையை கேட்டுள்ளனர்.

காலை 9.00 மணிக்கு முன்னர் யாழ்ப்பாணம் வருமாறு வானொலியில் முதல் நாளே அறிவிக்கப்படுவதாகவும் —

காலை 6.30 மணிக்கு கொடிகாமத்திலிருந்து புறப்படும் ஒரு பஸ்ஸும் 7.00 மணிக்கு மிருசுவிலிலிருந்து புறப்படும் ஒரு பஸ்ஸும் சாவகச்சேரி ஊடாக யாழ்ப்பாணம் செல்கின்றன என்றும் —

இந்த பஸ்களும் பயணிகளால் நிரம்பிய நிலையில் சாவகச்சேரிக்கு வருவதால் சாவகச்சேரி பஸ் நிலையத்தில் காத்திருக்கும் கப்பல் பயணிகள் இப்பஸ்களில் தமது பயணத்தைத் தொடர முடியாமல் உள்ளதாகவும் — தெரிவிக்கப்படுகிறது. (இ-117)

# மயானம் மீண்டும் பாவனைக்கு

யாழ்ப்பாணம், ஜன. 3
கோப்பாய் கந்தன் காடு மயானம் மீண்டும் மக்கள் பாவனைக்காக திறந்து விடப்பட்டுள்ளது.

இப்பகுதி மக்கள் மீளக்குடியேறியதில் இருந்து இந்த மயானம் பாதுகாப்புக்கருதி இராணுவத்தினரால் மூடப்பட்டிருந்தது.

தற்போது கடந்தவாரம் முதல் இது பாவனைக்கு விடப்பட்டுள்ளது. (இ-15)

# தட்டுப்பாடு

யாழ். போதனா வைத்திய சாலையில் ''சேர்ஜி கல்ஸ்பிரிட்'' டுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

சத்திர சிகிச்சைப்பகுதி இதனால் பெரும் சிரமங்களை அனுபவித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சத்திரசிகிச்சைக்கும், மற்றும் கிருமிதொற்றுக்களைத் தடுப்பதற்கும் அதி முக்கிய பங்கு வகித்து வரும் 'சேர்ஜிகல் ஸ்பிரிட்' அதுவே முடிவடைந்ததாகவும் இது பற்றி பலதடவைகள் முறைப்பாடு செய்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை. எனவும் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆஸ்பத்திரி பாதுகாப்பு தனியாரிடம்

யாழ்ப்பாணம், ஜன. 3 யாழ். போதனா வைத்தியசாலையின் பாதுகாப்புத் துறை மீண்டும் தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக வைத்தியசாலை இடம்பெயர்ந்ததை அடுத்து தனியார் பாதுகாப்புச்சேவை ரத்துச் செய்யப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணத்தில் மீண்டும் வைத்தியசாலை இயங்க ஆரம்பித்த பின்னர் வைத்தியசாலையின் காவலாளிகளாலேயே இச்சேவை நடத்தப்பட்டு வந்தது. (இ.15)

# ஆற்றலுள்ள இளம்...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தால் அதனைச் சரி செய்வதில் நிர்வாகப் பிரச்சினைகள் இருக்கின்றன.

இதனால் மாணவர்கள் திருப்தியுடன் தமது பயிற்சியைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இது எல்லாக் கல்விக் கல்லூரிகளுக்கும் பொதுவானது. எனினும் வவுனியா கல்விக்கல்லூரியைப் பொறுத்த வரை இதனை மிகவும் குறிப்பிட்டுக் கூறவேண்டியது. இங்கு எல்லாப் பொருள்களுமே விலை உயர்ந்தே காணப்படுகின்றன.

இதுபற்றி நான் உயர் மட்டத்தில் எடுத்துக்கூறியுள்ளேன். இது சாதகமான பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு உள்ளதாகவும் அறிய முடிகின்றது.

இதைவிட தற்போது யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களிலிருந்து வவுனியாவுக்கு அகதிகளாக வரும் தமிழ் மக்களில் ஏறத்தாழ 1,700 பேர் எமது கல்லூரியில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் இதனால் கல்லூரியின் செயற்பாட்டுக்கு தடைகளும் கஷ்டங்களும் ஏற்பட்டுள்ளன. மனிதாபிமான ரீதியில் இக்கஷ்டங்களை நாம் மகிழ்ச்சியுடன் ஏற்று இடமளித்து எமது கல்லூரி நடவடிக்கைகளையும் இயக்கி வருகின்றோம். தற்காலிகமான கஷ்டமாகவே இதை நாம் கருதுகின்றோம்.

கேள்வி: கல்விக்கல்லூரியின் எதிர்காலத் திட்டங்களில் மாற்றங்கள் ஏதும் இருப்பின்?

**கல்விக்கல்லூரியில் பயின்றாலேயே ஆசிரியர்பதவி**

பதில்: எதிர்காலத்தில் கல்விக் கல்லூரிகள் மூலமாகத்தான் ஆசிரியர் பயிற்றப்படுவதுடன் இதில் பயிற்சி பெற்றவர்களுக்கே ஆசிரிய நியமனமும் வழங்கப்படவுள்ளன. தற்போதுள்ள ஆசிரிய பயிற்சிக்கலாசாலைகளில் ஓரிரு வருடங்களில் ஆசிரியபயிற்சிகள் படிப்படியாகக் குறைக்கப்பட்டு அவை ஆசிரிய நிலையங்களாக மாற்றப்படவுள்ளன.

இலங்கையில்இப்போதுள்ள பதினொரு கல்விக் கல்லூரிகளும்15ஆக அதிகரிக்கப்பட்டு தேசிய கல்வியியற் கல்லூரிகள் என்று அழைக்கப்படவுள்ளன.

அந்த வகையில் புதிதாக யாழ்ப்பாணத்திலும் ஒரு தமிழ்மொழி மூல கல்விக் கல்லூரி அமைக்கப்படவுள்ளது மகிழ்ச்சிக்குரியதே.

இந்த கல்லூரிகள் ஒவ்வொன்றின் மூலமும் பல்வேறு துறைகளில் பயிற்சிகள் அளிக்கப்பட உள்ளன. இதனால் வவுனியா, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போன்ற தமிழ்மொழி மூலக் கல்லூரிகளில் ஆங்கிலம், சமூகவியல், மொழி, மனையியல், விவசாயம் போன்ற துறைகளிலும் ஆசிரிய பயிற்சி விரிவுபடுத்தப்படவுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கி ஆசிரிய கல்வித்துறைக்கு ஏராளமானநிதியை ஒதுக்கியுள்ளதால் கல்விக் கல்லூரிகளின் தரமும், தன்மையும் விரிவடைய வாய்ப்புள்ளதிட்டங்கள் அமுல்படுத்தப்படவுள்ளன.

இதற்கு முன்னோடியாக கலைத்திட்ட ஒழுங்கமைப்புச் சேவைகள் இடம்பெறுகின்றன. தொழில்நுட்ப, விஞ்ஞான வளர்ச்சிக்கேற்ப கணனிக்கல்வி, ஆசிரிய தொழில் நுட்பக்கல்வி என்பனவற்றுக்காக முக்கியத்துவம் அளிக்கப்படவுள்ளது. பௌதிக, ஆளணி வளங்களை அதிகரிப்பதற்கும் மெருகுபடுத்துவதற்கும் வழிமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

குறிப்பாக விரிவுரையாளர்கள் ஆசிரியர் பயிற்றுநர் சேவை என்ற சேவைக்கு உள்வாங்கப்படுவதுடன் அவர்களுக்கு விரிவான உள்ளூர் வெளியூர் பயிற்சிகளுக்கான புலமைப்பரிசில், வேலைத்திட்டங்கள் என்பனவும் வழங்கப்படவுள்ளன.

எனவே கல்விக்கல்லூரிகளின் எதிர்காலம் சிறப்பாக அமைவதுடன் அதன் அறுவடைகளும் ஆசிரிய கல்வித்துறையில் அபரிமிதமாக அமையுமென்று எதிர்பார்க்கலாம். ★

## சமாதானத்தின்-...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுக் கொடுப்பதற்காக நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

கல்வி, தொலைபேசி, சுகாதார வசதி, போக்குவரத்து, வீடு, நீர்வசதி போன்ற அத்தியாவசிய சேவைகள் முதலில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்காக விவசாய மற்றும் மீனவ மக்களின் அடிப்படைத் தேவைக்ள் என்பனவும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

யாழ். குடா நாட்டு விவசாயிகளுக்குத் தேவையான விதைகள், உர வகைகள், கிருமி நாசனிகள், களைக் கொல்லிகள், விவசாய உபகரணங்கள் மற்றும் நீர் இறைத்தலுக்குத் தேவையான எரிபொருள் என்பவற்றை கட்டுப்பாட்டு விலையில் வழங்கும் நடவடிக்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பிரதேசங்களில் செயற்பட்டுவரும் விவசாய ஆராய்ச்சி நிலையங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அதன்மூலம் கலப்பின மிருகங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, பிரதேசங்களில் விவசாயிகளினால் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் தற்போது படையினரின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதேபோல் மேலதிக உற்பத்திப் பொருள்கள் கப்பல் மூலம் கொழும்புக்கு எடுத்துச் செல்லும் நடவடிக்கள் தற்போது ஓரளவுக்கு செயற்படுத்தப்பட்டு வருகின்றன. எதிர்காலத்தில்இதனை பெருமளவில் மேற்கொள்ளப்பட முடியும். அதேபோல் மீன்பிடித் தொழில் அபிவிருத்திக்காகவும் பாரிய திட்டங்கள் இவ்வாண்டுக்குள் மேற்கொள்ளப்படும்.

இவையாவும் சுமுகமான நிலையில் நடைபெற வேண்டுமெனில், இப்பிரதேசத்தில் சமாதானமான சூழ் நிலை ஒன்று நிலவ வேண்டும். இவ்வாறு இல்லையெனில், அபிவிருத்தி நடவடிக்கைகளை விரைவாகவும், காரியானுகூலமாகவும் மேற்கொள்ள முடியாதிருக்கும்.

இந்த இலக்கைக் கொண்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் வெற்றிபெற வேண்டுமெனில் பிரதேச மக்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய முக்கிய கடமைகள் உள்ளன.

அதாவது புலிகள் இயக்கப் பயங்கரவாதம் இப் பிரதேசத்தினுள் தலை தூக்குவதைத் தடுப்பதற்கு அரசாங்கத்தினாலும் படையினராலும் மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகளுக்குப் பூரண ஒத்துழைப்பை வழங்குவதே ஆகும்.

பொதுமக்களிடையே நடமாடும், புலிப் பயங்கரவாதிகள் நாசகார நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடும் என்பதால், அத்தகைய சந்தர்ப்பங்களைத் தடுப்பதற்கு பாதுகாப்புப் படையினருக்கு ஒத்துழைப்பு வழங்கி அவர்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமையை நிறைவு செய்து கொள்ள முடியும்.

1997 ஆம் ஆண்டு யாழ். வாழ் மக்கள் அனைவருக்கும் சமாதானமும், மகிழ்ச்சியும் நிறைந்த சுபீட்சமான ஆண்டாக அமைய வேண்டுமென பாதுகாப்புப் படையினர் வாழ்த்துகின்றனர்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.


# கண்ணீர் அஞ்சலி

## ஓதுவார் அ. காசிப்பிள்ளை

குப்பிளானை பிறப்பிடமாகக் கொண்டவரான **அ. காசிப்பிள்ளை அவர்கள் 27 - 12 - 96** இல் மல்லாவியில் சிவபதம் அடைந்தார். அன்னார் குப்பிளான் சொர்க்கவளவு சோதி விநாயகர் ஆலய தொண்டரும், ஏழாலை இலந்தைகட்டி ஸ்ரீ பாதாள ஞானவைரவர் ஆலய தர்மகர்த்தாக்களில்ஒருவரும், ஓதுவாருமாவார். ''அரன்நாமமே சூழ்க வையகமும் துயர் தீர்கவே'' என்பதை அடிநாதமாகக் கொண்டு ஆத்மீக வள்ளல் திரு. நா. முத்தையா ஆத்மஜோதி ஆசிரியர் வடமாகாணத்தில் தமிழ் மக்களுக்கான சமாதானமும், சுபீட்சமும், அமைதியும் மக்களிடையே பக்தி உணர்வும் வேண்டி மேற்கொண்ட திருத்தல பாத யாத்திரையில் கலந்து கொண்ட அடியார்கள் கூட்டத்தில் முதல் இடம் வகித்து ஆத்மஜோதி ஐயாவின் நன்மதிப்பைப் பெற்றவர். அயராது இறைவன் துதி பாடி மக்களை ஒரு நிலைப்படுத்தும் பெருந் தொண்டர். அன்னாரது இழப்பு சைவத்தமிழுக்கு பேரிழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம். அன்னாரது குடும்பத்தாருக்கு எமது அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம். மேற் காட்டிய இரு ஆலய பரிபாலன சபை சார்பிலும், குப்பிளான், ஏழாலை அன்பர்கள் சார்பிலும் அறியத் தருகின்றோம்.

**ந. பாலசுப்பிரமணியம்**
செயலாளர்

**த. தர்மலிங்கம்**
தலைவர்

**ஆலய பரிபாலனசபை**

(44459)


# தமிழ்மொழி மூல ஆசிரியர் நியமனம் விடுபட்டவர் நிலை என்ன?

1996 ஆம் ஆண்டுநடைபெற்ற தமிழ்மொழி மூல ஆசிரியர்களுக்கான போட்டிப் பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்கப் பெறாததால் மனப் பாதிப்புக்குள்ளாகி வேதனைப்படும் பல நூற்றுக்கணக்கான பரீட்சார்த்திகளில் நானும் ஒருவன் என்பதனால் இதை எழுதுகின்றேன்.

எவ்வித தகுந்த காரணங்களும் இன்றி, என்னைப் போன்ற பல பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறவில்லை. ஆனால் இவ்விடயம் தொடர்பாக இன்றுவரை எவரும் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கவில்லை. தவறுகள் எங்கே நடந்திருப்பினும் அதனால் பாதிக்கப்பட்ட பரீட்சார்த்திகளின் மனதிற்கு ஒத்தடம் கொடுக்கும் நடவடிக்கை தானும் சம்பந்தப்பட்டவர்களால் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

குறிப்பிட்ட வயதுக்கு மேல் அரச தொழில்களைப் பெறுவது கடினம் என்ற வரையறை இருக்கும்போது, அனிமதி அட்டை கிடைக்காததால் ஒரு சந்தர்ப்பம் வீணடிக்கப்படுவது மிகுந்த வேதனைக்கு உரியது. இதனை எவ்வகையிலேனும் யாரும் நியாயப்படுத்தவும் முடியாது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் இவ்வாறு பாதிப்படைந்த எம்மைப் போன்ற பரீட்சார்த்திகளுக்கு யார் நிவாரணம் செய்யப் போகின்றார்கள்.

எமது பாதிப்புத் தொடர்பாக நாம் இலங்கை ஆசிரியர் சங்க யாழ். பிரதேச அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு எமது பரிதாபகரமான நிலைப்பாட்டுக்கு பரிகாரம் காணுமாறு வேண்டி எமது பெயர்களைப் பதிவு செய்தோம். இலங்கை ஆசிரியர் சங்கம் விடுத்த பத்திரிகை அறிவித்தலுக்கு இணங்கவே எமது பாதிப்புக்களை அவர்களிடம் எடுத்துக் கூறினோம். அதன் பிற்பாடு எமது பாதிப்புக்கள் தொடர்பாக ஏதேனும் சாதகமான தகவல்கள் வெளியாகி இருக்கின்றனவா என்று செய்தித்தாள்களைப் புரட்டாத நாள்களே இல்லை.

இவ்வாறான சூழ்நிலையில்தான், 1996-ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் பங்கு பற்றியவர்களின் பெறுபேற்றின் புள்ளி அடிப்படையில் அடுத்த வருடம் ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படும் என்ற செய்தி காணப்பட்டது.

இச் செய்தியைப் படித்தும் பாதிக்கப்பட்ட பரீட்சார்த்தி என்ற அடிப்படையில் நான் மிகவும் வேதனைப் பட்டேன். பரீட்சைக்குத் தோற்றாத பரீட்சார்த்திகள் தங்களின் கவனயீனத்தால் பாதிக்கப்படவில்லை என்பதை இங்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பாதிக்கப்பட்ட ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை நடக்கும் இறுதி வினாடி வரை தங்களுக்குரிய பரீட்சை நிலையம் எங்கு அமைந்திருக்கின்றது; பரீட்சார்த்திகளின் பட்டியல்களில் தமது பெயர்கள் வந்துள்ளனவா என்பதை அறிவதற்காக அங்கும் இங்கும் அலைந்து திரிந்தார்கள். இப்படி அலைந்து திரிந்தவர்களில் நானும் ஒருவன் என்ற அடிப்படையிலேயே இத்தகவலைத் தெரிவிக்கின்றேன். இது தொடர்பாக எங்கேனும் ஒரு நம்பிக்கைக் கீற்று தென்படாதா என்று ஏங்குகின்றேன்.

பாதிக்கப்பட்டவர்களுக்கென்று மீண்டும் ஒரு பரீட்சை வைக்கக் கூடாதா? ஏதும் அறியாமல் அப்பாவித்தனமாகப் பாதிக்கப் பட்டவர்களுக்கு மீண்டும் பரீட்சை வைப்பது தான் நியாயம். இது விடயத்தில் தொடர்புடையவர்கள் யாராக இருந்தாலும் கவனத்தில் எடுத்து எமக்குப் பரிகாரம் காணுவார்களா?

### வாசகர் திருமுகம்

இப்பரீட்சைக்குத் தோற்றியவர்களில் பலர் 1994 ஆம் ஆண்டில் நடைபெற்ற போட்டிப் பரீட்சையிலும் தோற்றியவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது அந்தப் போட்டிப் பரீட்சையிலே நல்லபெறுபேறுகள் பெற்று பலரும் இருக்கின்றார்கள். இத்தகைய நிலையில் இந்த வருடம் (1997) இடம் பெறும் ஆசிரிய நியமனத்தில் 1994 ஆம் ஆண்டின் பெறுபேற்றுப் புள்ளிகளை தொடர்புடையவர்கள் கவனத்தில் எடுத்து பாதிக்கப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு தகுந்த நீதி வழங்குவார்களா?

ஒன்றில் புதிதாகப் போட்டிப் பரீட்சை வைக்க வேண்டும் அல்லது பாதிக்கப்பட்ட பரீட்சார்த்திகளின் 1994 ஆம் ஆண்டின் பெறுபேற்றுப் புள்ளி அடிப்படையிலேனும் நியமனம் வழங்கப்படுதல் வேண்டும்.

இவ்விடயத்தோடு தொடர்புபட்ட சகல தரப்பாரும் ஒன்றிணைந்து இந்தப்பிரச்சினைக்கு நீதியான நியாயமான நல்லதொரு முடிவினை எடுப்பார்களென நம்புகின்றேன்.

**பா. பிரபாகரன்.**

பொலி கண்டி

# எவ்வாறு வரி செலுத்துவது?

குடாநாட்டில் இயங்கும் மாநகரசபையும், நகரசபைகளும், பிரதேசசபைகளும் வரிசெலுத்துமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கின்றன.

தற்போது வடபகுதியில் அரசாங்கத்தின் பாதுகாப்புப் படையினர் எத்தனையோ பொதுமக்களின் காணிகள் மற்றும் பொதுமக்களின் வீடுகளைப் பிடித்து வைத்திருக்கிறார்கள். அக்காணிகள், வீடுகளில் இருந்து அவற்றின் உரிமையாளர்களான பொதுமக்கள் வருமானங்கள் எவற்றையும் பெறுவதில்லை.

இவ்வாறிருக்க பாதிக்கப்பட்ட பொதுமக்கள் எவ்விதம் அதிகாரிகளின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க குறிப்பிட்ட காலங்களில் வரிசெலுத்த முடியும். இதனை அந்த அந்தப் பகுதிக்குப் பொறுப்பான அதிகாரிகள் கவனத்தில் கொள்ளக்கூடியதா?

தயவு செய்து பெருந்தன்மை கொண்டு சிந்தித்து செயலாற்ற முடியாதா? காலம் கடந்தால் நிலுவை வரிக்கு குற்றப்பணமும் அல்லவா அறவிடுகிறார்கள். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய தலைமைப் பீடத்துடன் தொடர்பு கொண்டு தயவு செய்து இது விடயத்தில் ஆவன செய்வார்களா?.

**ந. விக்கினேஸ்வரன்**

சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்

## ஒலிகளும் எதிரொலியும்

கடந்த இருநூறு ஆண்டு காலமாக சிங்கள மக்கள் அனுபவித்து வரும் இன்னல்கள் குறித்து விசாரணை நடத்தி அறிக்கை தயாரிப்பதற்காக விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கின்றது.

36 பௌத்த அமைப்புகள் அங்கம் வகிக்கும், இலங்கைத் தேசிய இணைப்புக் குழு நிலையத்தினால் நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக் குழுவுக்கு, முன்னாள் நீதியரசர் ஒருவர் தலைமை வகிக்கின்றார்.

இதே வேளையில், "சிங்கள பௌத்தர்களின் உரிமைகளைப் பாதுகாப்போம்" என்று உறுதிமொழி எடுத்துக் கொள்வதற்காக சகல பௌத்த மத பீடங்களைச் சேர்ந்தவர்களும் எதிர்வரும் பன்னிரண்டாம் திகதி கண்டி தலதா மாளிகையில் கூடவிருக்கின்றனர்.

இந்த நாட்டின் இரண்டு பிரதான கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் ஒன்றுபடாவிடில், எதிர்காலத்தில் சிங்கள மக்கள் இந்த நாட்டில் மலசல கூடம் கழுவும் வேலையைத்தான் செய்ய நேரிடும் — என்று பௌத்த பிக்கு ஒருவர் கூறியிருக்கின்றார்.

இவற்றைப் படிக்கும் போது, ஒருவர் என்ன முடிவுக்கு வரமுடியும்? இப்போதுள்ள அரசியல் சூழ்நிலையில் இத்தகைய செயற்பாடுகள், கருத்துக்கள் எதனை மையமாகக் கொண்டு மேலெழுகின்றன?

ஜனாதிபதி சந்திரிகாவின் அரசு, தமிழர்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கென தீர்வு ஒன்றைத் தயாரித்து வருகிறது. அந்தத் தீர்வுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசு உறுதி பூண்டிருப்பதாகவும் அந்தத் தரப்பிலிருந்து கூறப்படுகிறது.

உத்தேசத் தீர்வு தமிழர்களுக்கு வானவர் உலகத்திலிருந்து எதனையோ வாரி வழங்கப் போவதாகக் காட்டிக்கொள்வதற்கு, தெற்கில் உள்ள பேரினவாத சக்திகள் திட்டமிடுகின்றன. அதற்கான பீடிகைகள், மேளதாளங்கள், ராகங்களே இப்போது ஒலிக்கத் தொடங்கியுள்ளன.

அரசாங்கத்தின் உத்தேச தீர்வின் மூலம் தமிழர்களுக்கு உருப்படியாகக் கிடைக்கப் போகும் உரிமைகள் எவை என்பது இன்னமும் தெரியாது. அதற்கு ஆகக் குறைந்தது மூன்று மாதங்களாவது செல்லும்.

அவ்வாறிருக்க, உத்தேச தீர்வுத் திட்டம் நிறைவேற்றப்பட்டு, தமிழர்களுக்கு எந்தவித உரிமையும் வழங்கப்படாமல் தடுக்கும் நோக்குடனேயே மேற்சொன்ன மேள தாளங்கள் ஒலிக்கத் தொடங்கியுள்ளன.

அரசின் தீர்வுத் திட்டமான அதிகாரப் பரவல் யோசனை குறித்து மக்கள் கருத்துக் கணிப்பை நடத்துவது என்ற செய்தி வெளிவந்துவிட்டதல்லவா? எனவே சிங்கள மக்களை தீர்வு யோசனைக்கு எதிராக வழி நடத்தும் ஆயத்தங்கள் ஆரம்பமாகின்றன. அவ்வளவு தான்.

தமிழர்களுக்குச் சில சலுகைகளை மட்டுமேவழங்கலாம்; அவர்களது உரிமைகளை அல்ல என்ற மனப்பாங்கு தெற்கில் ஆழமாக வேரூன்றிப் பதிந்திருப்பதையே இந்த ஒலிகள் எதிரொலிக்கின்றன.

ஆனால் தமிழர்கள் தங்களுக்குரிய உரிமைகளையே அவாவி நிற்கின்றனர்; வெறும் சலுகைகளை அல்ல.

# அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகள் தனித்துப் போட்டியிட நிபந்தனை

## மூன்றில் இரண்டு பங்கு ஆதரவைத் திரட்ட வேண்டும்

கொழும்பு, ஜன. 3

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் எந்த ஒருகட்சியாவது தனித்துப்போட்டியிட விரும்பினால், முன்னணியின் சட்ட திட்டங்களின் பிரகாரம் முன்னணி உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்குஉறுப்பினரின் ஆதரவைத் திரட்ட வேண்டும்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் செயலாளரும் அமைச்சருமான டி. எம். ஜயரத்தின மேற்கண்டவாறு நிபந்தனை விதித்துள்ளார்.

முன்னணியின் சட்ட திட்டங்களுக்கு எதிராக அரசில் அங்கம் வகிக்கின்ற எக்கட்சியாவது தனித்துப் போட்டியிட முனைந்தால், அக்கட்சிக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்க நேரிடும் எனவும் அவர் எச்சரித்தார்.

"பேருவளை, புத்தளம், கொழும்பு ஆகிய பகுதிகளில் தனித்துப் போட்டியிடப் போவதாக முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்தது. ஆனால் அது நிராகரிக்கப்பட்டு விட்டது.

வடக்கு – கிழக்குக்கு வெளியே உள்ள 110 சபைகளில் முஸ்லிம் காங்கிரஸ் பொதுப்பட்டியலில் போட்டியிடலாம்" என்றும் அவர் தெரிவித்தார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பொதுப்பட்டியல் குறித்த இறுதிப் பரிசீலனை இவ்வாரம் இடம் பெறும் என்றும் அவர் கூறினார்.

இந்த அறிவிப்பால் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் லலித் பிரிவும் நெருக்கடியை எதிர் நோக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது,

உள்ளூராட்சித் தேர்தல்களில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (லலித் பிரிவு) சில இடங்களில் தனித்துப் போட்டியிடமுடிவு செய்திருப்பது தெரிந்ததே. (இ-3-150)

## சுகாதாரப்பகுதி சீருடைகள்

யாழ்.சுகாதார சேவைகள் மாகாணப்பணிப்பாளர் பணிமனைக்கு உட்பட்ட சுகாதார நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கான கடந்த வருடத்துக்குரிய சீருடைகள் அந்தந்த நிறுவனங்களில் புதன்கிழமை தொடக்கம் வழங்கப்பட்டு வருகின்றன. (இ-117)

## ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் தமிழருக்கு சுயநிர்ணய உரிமை

### ஜே.வி.பி.ஆதரவுக்கட்சிகள் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 3

"இனப்பிரச்சினைக்குத் தீர்வாக ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் சுயநிர்ணய உரிமை வழங்கவேண்டும்" என்ற கோரிக்கையை முன்வைத்து ஜே. வி. பி. ஆதரவுக்கட்சிகள் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடவிருக்கின்றன.

ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி மக்கள் விடுதலை ஒற்றுமை முன்னணி ஆகிய இரண்டும்இணைந்து போட்டியிட முடிவு செய்துள்ளன.

தென்பகுதியில் உள்ள சபைகளிலும், அனுராதபுரம். பதுளை ஆகிய இடங்களில் உள்ள சபைகளிலும் இக்கட்சிகளின் வேட்பாளர்கள் போட்டியிடவிருக்கின்றனர். (இ-3-150)

## இ. தொ. கா. நிலைப்பாடு என்ன?

கொழும்பு, ஜன. 3

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் அரசாங்கத்துடனா அல்லது ஐ. தே. கவுடனா இணைந்து போட்டியிடுவது என்பது குறித்து ஆராய இ. தொ. காவின் நிறைவேற்றுக்குழு அடுத்த வாரம் கூடவிருக்கிறது.

இது குறித்து மாவட்ட அமைப்பாளர்களின் கருத்தைக் கேட்டு அதற்கேற்ப முடிவு எடுக்கப்படும் என்று இ. தொ. கா. எம். பியான பி. பி. தேவராஜ் தெரிவித்தார்.

"தேசிய ரீதியில் செயற்படும் வகையில் இ. தொ. காவுக்கும் ஐ. தே. கவுக்கும் இடையில் உடன்பாடு உள்ளது. தனிப்பட்டவகையிலும் தோட்டத் தொழிலாளர் நலனிலும் அக்கறையுடன் ஐ. தே. க செயற்பட்டு வந்துள்ளது. ஆகவே இ. தொ. கா எந்தப்பிரிவுடன் தேர்தலில் போட்டியிடுவது என்பது குறித்து இன்னமும் முடிவு செய்யவில்லை" என்றும் அவர் தெரிவித்தார்.

"எம்மைப் பொறுத்த வரையில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும், ஐ. தே. கவும் ஒன்றுதான்' வேறுபாடு எதுவும் இல்லை. தோட்டத் தொழிலாளர் நலனே எமக்கு முக்கியம்" என்றும் அவர் கூறினார். (இ-3-150)

## பல்கலைக் கழகத்துக்கு அனுமதி பெறுவதற்கு பிரவேசப் பரீட்சை

### அமைச்சுச் செயலாளர் தகவல்

கொழும்பு, ஜன. 3

ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சைக்குப்பின் மாணவர்களை பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்வதற்கு பிரவேசப் பரீட்சை ஒன்றை நடத்த பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு திட்டமிட்டு வருவதாக கல்வி, உயர் கல்வி அமைச்சுச் செயலாளர் எம். டி. டி. பீரிஸ் தெரிவித்தார்.

ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சையில் சித்தி பெறும் மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கான ஆகக் குறைந்த பட்ச புள்ளிகள் நிர்ணயம் செய்யப்படும்.

ஒவ்வொரு துறைக்கும் புள்ளிகள் வெவ்வேறாக இருக்கும்.

இந்தப் புள்ளிக்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறும் மாணவர்களே பிரவேசப் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

குறைந்தபட்சப் புள்ளிகளுக்கும் குறைவான புள்ளிகளைப்பெறும் மாணவர்கள் தாங்கள் வேறு துறைகளில் பயிற்சிகளை அல்லது கற்கை நெறிகளை பயின்று தொழில் வாய்ப்பைத்தேடிக் கொள்ள வழி ஏற்படும்.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# திருவாசகத் தேன் பருகுவீர்; அரிதான பொருள் எளிதாகும்

மார்கழி மாத, கால தேச வர்த்தமானத்திற்கு எல்லாம் சுருதி சேர்ப்பதாக அமைந்திருப்பது தித்திக்கும் திருவாசகம் என்னும் தேன். அந்தத் தேனைக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவதனால் பிறவிப் பிணி மாத்திரம் அன்றி தேடியும் தேடொணாத தெவிட்டாத் தெள்ள முதைக் கூடிக் கொள்ளலாம். கூடி முயங்கி மயங்கி நின்று ஊடிச் செவ்வாய்க்கு உருகி, உள்ளுருகித் தேட முடியாது போனாலும், உள்ளப்படாத திருவுருவை உள்ளுதலோடு, கள்ளப்படாதகளிவந்த வான் கருணை வெள்ளப் பிரான் எவ்வாறு வாதவூரடிகளுக்கு வந்து வாய்த்தது என்பதை யாவது உற்று உணர்ந்து கொள்ளலாம்.

அது பழச் சுவையென அமுதென அறிதற்கு அரிதென்பதனை 'சொற்பதங் கடந்த தொல்லோன்,' –பிரமன்மால் காணாப் பெரியோன், 'சித்தமும் செல்லாச் சேட்சியன்', 'அணுத்தருந் தன்மையில் ஐயோன்', 'அரியதில் அரிய அரியோன்', 'நூலுணர் வுணரா நுண்ணியோன்' 'கூர்த்த மெய்ஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின் நோக்கரிய நோக்கு', 'நுணுக்கரிய நுண்ணுணர்வு' என்னும் வாக்குகள் மெய்ப்பிக்கின்றன.

பின்னரும் பிரானை உணர முனைப்படும் போதும், ஊனமிலியோனியினுள் வினைப் பிழைப்பில் இருந்து இருபது பிழைப்புகளைத் தாண்டி வந்து, தெய்வமென்பதோர் சித்தமுண்டாகி முனிவிலாததோர் பொருளைக் கருதலும், ஆறு கோடி மாயா சக்திகள் வேறு வேறு தம் மாயைகள் தொடங்குமாயின் அப்பொருளை அறிவது அரிதிலும் அரிதிலும் அரியதாகும் அன்றோ?

நம் அளவில் அரிதாகும் அப்பொருள் மணிவாசகப் பெருமானுக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல அல்லவா எளிதாக வெளிப்பட்டு விளையாடுகின்றது!

### ஞானக்கதிர்

திருவாதவூரர் தம் வாக்கிலேயே அதை நாம் அறிந்து இன்புறலாம். அமரர்களுக்கும் அறிவதற்கரியாரை உள்ளங்கை நெல்லிக்கனி போல எவ்வளவு எளிதாகக் கண்டு சொல்லுகிறார்:

இன்றெனக் கெளிவந் திருந்தனன் போற்றி.

தடக்கையின் நெல்லிக் கனியெனக் காயினன்.

அற்புதமான அமுத தாரைகள் எற்புத் துளைதொறும் ஏற்றினன்.

வாக்கிறந் தமுதம் மயிர்க்கால் தோறுந் தேக்கிடச் செய்தனன்.

என்னிற் கருணை வான்தேன் கலக்க அருளொடு பராவமு தாக்கினன்.

நாயினேனை நலமலி தில்லையுட் கோல மார்தரு பொதுவினில் வருகென.

அரியொடு பிரமற் களவறியாதவன் பரிமா வின்மிசைப் பயின்று.

ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமான்.

நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி.

தாயே யாகி வளர்த்தனை போற்றி.

அந்தமிலா ஆனந்தம் அணிகொள்தில்லை கண்டேனே.

கணக்கிலாத் திருக்கோலம் நீ வந்து காட்டினாய் கழுக்குன்றிலே.

வம்பனேன்தன்னை ஆண்ட மா மணியே.

உரைமாண்ட உள்ளொளி உத்தமன் வந்துளம்புகலும்,

புன்மையேனை ஆண்டையா புறமே போக விடுவாயோ....'

இவை போல்வன இன்னும் அனேகம் அனேகம்.

அரிதாய அரும்பொருள் நமக்கும் எளிதாகலாம் என்பதற்கு வாதவூர் இறைவர் தம் அனுபவத்தை நமக்கும் வகுத்துக் காட்டியுள்ளார்.

நிலக் குளிர்ச்சி நீர்க் குளிர்ச்சி, உளக் குளிர்ச்சி, தெய்வ அருள் குளிர்ச்சிக்குக் குறைவில்லாத இந்தமார்கழி மாதத்திலாவது நாம் மருவா நெறி அளிக்கும் திருவாசகம் என்னும் தேனைப் பருகிப் பருகிப்பயன் பெறலாம்.

- சிவ. சண்முகவடிவேல்

### நாளை

மார்கழி 20

சனிக்கிழமை

திதி: தசமி

பிற்பகல் 5.12 வரை.

நட்சத்திரம்: சுவாதி

பிற்பகல் 4. 42 வரை.

ராகுகாலம்: 9.31-11.01

சுபநேரம்: [illegible]

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## அஞ்சல் சேவை பதவிக்கு 20 பேர் நியமனம்

யாழ்ப்பாணத்தில் உள்ள அஞ்சல் அலுவலகங்களில் தொகுதி 'பி', தரம் II இலுள்ள அஞ்சல் சேவை உத்தியோகத்தர் பதவிக்காக 20 பேர் அஞ்சல் அதிபர் மா நாயகம் திருமதி. எச். எம் எஸ். கொட்டக்கதெனியாவினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அரசாங்க சேவையின் எழுதுவினைஞர் அதனுடன் இணைந்த சேவைகளுக்கும் மற்றும் அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கும் எதுவினைஞர்களை நியமிப்பதற்குமான 94/95 ஆம் ஆண்டிக்கான பொதுப் போட்டிப்பரீட்சையில் பெற்ற பெறுபேறுகளினடிப்படையிலேயே இந்த 20 பேரும் நியமிக்கப்பட்டனர் என்று வடபிராந்திய அஞ்சலதிபர் நாயகம் தெரிவித்தார். (இ-5)

## கப்பலில் செல்லும் நோயாளர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், ஜன. 3

வைத்திய நிபுணர்களினால் சிபார்சு செய்யப்பட்டு, யாழ். வைத்தியசாலைப்பணிப்பாளரிடம் பெயர் பதிவு செய்து இதுவரை கப்பலில் பயணம் செய்யாதவர்களை எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கட்கிழமை வைத்தியசாலைக்கு வந்து பெயர்களைப் பதிவு செய்யுமாறு கோரப்பட்டுள்ளது.

இன்றும் எதிர்வரும் 9 ஆம், 13 ஆம் திகதிகளிலும் பயணத்தை உறுதிப்படுத்தியவர்கள் மீண்டும் பதிவு செய்யத் தேவையில்லை என்று வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (இ-3)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சளி எடுக்கும் இயந்திரம் வாங்க ஆஸ்பத்திரிக்கு அறநிதி அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 3

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக் குட்டியின் எழுபத்திரண்டாவது பிறந்த தினம் எதிர்வரும் ஏழாம் திகதியாகும்.

அதனையொட்டி, அன்றைய தினம், இவ்வாண்டுக்குரிய தங்கம்மா அப்பாக் குட்டி அறநிதிய அன்பளிப்பு யாழ். போதனா வைத்திய சாலைக்கு வழங்கப்படும்.

யாழ். ஆஸ்பத்திரியின் அவசர சிகிச்சைப் பிரிவில் அத்தியாவசியம் தேவைப்படும் சளி எடுக்கும் வைத்தியக்கருவி இல்லை. அந்த இயந்திரத்தை பொருத்துவதன் மூலம் பல உயிர்களைக் காப்பாற்றலாம் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

அதன் நிமித்தம் குறிப்பிட்ட (சளி எடுக்கும்) இயந்திரத்தை வாங்குவதற்குத் தேவையான நிதி, தங்கம்மா அப்பாக்குட்டி அறநிதிய அன்பளிப்பாக வழங்கப்பட உள்ளது. (அ)

## தென் ஆபிரிக்கா 272 ஓட்டங்கள்

தென் ஆபிரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையேயான 2 ஆவது கிரிக்கெட் போட்டி நேற்று கேப்டவுணில் ஆரம்பமானது.

முதலில் துடுப்பெடுத்து ஆடிய தென் ஆபிரிக்க அணி 4 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 272 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. கேஸ்டன் 103 ஓட்டங்களையும், கலினன் 77 ஓட்டங்களையும் பெற்றனர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிதம்பரம் கதிர்காமர்

நெடுந்தீவைச் சேர்ந்தவரும், தற்போது அருளம்பலம் வீதி, அரியாலையில் வசித்தவருமான திருமதி சிதம்பரம் கதிர்காமர் அவர்கள் 1-1-97 இல் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமரின் அன்பு மனைவியும், இலட்சுமி (நெடுந்தீவு), காமாட்சி (புங்குடுதீவு), புவனேஸ்வரி (ஓய்வு பெற்ற மருத்துவமாது - காரைநகர்), சண்முகரத்தினம், இராஜேஸ்வரி (வவுனியா), செல்வம் (கொழும்பு), பிள்ளைநாயகம் (புங்குடுதீவு) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற பாலச்சந்திரன் (நெடுந்தீவு), கந்தையா (புங்குடுதீவு), நடராசா (காரைநகர்), இராஜேஸ்வரி, சிவானந்தராசா (ஓய்வுபெற்ற பொறியியலாளர், வவுனியா), விஜேமானே (கொழும்பு), தவமணிதேவி, நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 30/3, அருளம்பலம் வீதி, அரியாலை இல்லத்தில் 3 - 1 - 97 வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக சித்துப்பாத்தி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**க. சண்முகரத்தினம், க. பிள்ளைநாயகம்.**
(பிள்ளைகள்)

அருளம்பலம் வீதி,
அரியாலை.

(44472)

## இராசப்பு இராமநாதன்

(ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்)

உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்தவரும் கோண்டாவில் நெட்டிலிப்பாயை வசிப்பிடமாகக் கொண்டவருமான இராசப்பு இராமநாதன் 02 - 01 - 97 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக் கணவரும், மனோகரநாதன் (கரன்) அவர்களின் பாசமிகு தந்தையும், ரஜனியின் மாமனாரும், குருபரன், திவ்யா ஆகியோரின் பாசமிகு பேரனும், சிவலிங்கம் (கொழும்பு), கமலாவதி (உரும்பிராய்) ஆகியோரின் சகோதரருமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று பன்னிரெண்டு மணியளவில் காரைக்கால் மயானத்தில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**மனோகரநாதன் (கரன்)**
(மகன்)

(9141)

## நடராசா மனோகரன்

யாழ்ப்பாணம், திருநெல்வேலி வளாகவீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட நடராசா மனோகரன் பிரான்ஸில் காலமானார்.

இவர் நடராசா — நாகரத்தினம் தம்பதியினரின் கனிஷ்ட புத்திரரும், பராசக்தியின் அன்புக்கணவரும், சஞ்சிகா, சஞ்சயன், அருஞ்சயன் ஆகியோரின் தகப்பனாரும், புவனேஸ்வரி, புவனேந்திரன் (கீதா ஸ்ரோர்ஸ், திருநெல்வேலி), தெய்வேந்திரன், தேவி மனோகரி, அம்பிகாதேவி (கனடா), கெங்கா (கனடா), ஜமுனா (கனடா) ஆகியோரின் சகோதரரும், கமலநாதன், ரஞ்சனாதேவி, ஸ்ரீரஞ்சினி, ஸ்ரீரங்கநாதன், தனபாலசிங்கம், ராஜநாதன், உதயசேகரன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (3-1-97) வெள்ளிக்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

தகவல்;
**N. தெய்வேந்திரன்**

வளாகவீதி,
திருநெல்வேலி.

(44473)

**மேலும் மரண அறிவித்தல்கள் 2 ஆம் பக்கத்தில்**

# பத்திரிகையாளர் மாநாட்டிலிருந்து நேற்று செய்தியாளர் வெளிநடப்பு

கொழும்பு, ஜன. 3

அமைச்சரவைத் தீர்மானங்களை வெளியிடும் பத்திரிகையாளர் மாநாட்டிலிருந்து பல பத்திரிகையாளர்கள் நேற்று வெளிநடப்புச் செய்தனர்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவின் உறவினரும் ரி. என். எல். தொலைக்காட்சி நிறுவனத்தின் செய்திப் பணிப்பாளருமான இசிமி விக்கிரமசிங்கா பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டதை ஆட்சேபித்தே இந்த வெளிநடப்பு இடம் பெற்றது.

நேற்றுக் காலை கொள்ளுப்பிட்டி உல்லாசப் பயண சபைக் கட்டடத்தில் இந்த வருடத்தின் முதலாவது மாநாடு ஆரம்பமானபோது பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் ரி. என். எல். தொலைக்காட்சி சேவையின் செய்திப் பணிப்பாளர் கைது செய்யப்பட்டதை ஆட்சேபித்து பத்திரிகையாளர்கள் பதாகைகளைத் தாங்கிய வண்ணம் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

அதேசமயம் நேற்றுக் காலை ரி. என். எல். தொலைக்காட்சி நிறுவனத்தின் செய்திப் பணிப்பாளர் இசிமி விக்கிரமசிங்க ஆஜராகவிருந்த கொழும்பு பிரதம மஜிஸ்ரேட் நீதிமன்றத்துக்கு முன்பாக நின்று பல அமைப்புகளின் பிரதிநிதிகள் கோஷங்களை எழுப்பினர்.

(இ-10)

## அதிபர் கூட்டம்

தென்மராட்சி, ஜன. 3

தென்மராட்சி கல்விக் கோட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

(இ- 117)

## காங்கிரஸ்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சீதாராம் கேசரியை காங்கிரஸ் நாடாளுமன்றக் குழுத் தலைவராகத் தெரிந்தெடுப்பதற்கு ராஜேஸ் பைலட் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். இவருக்கு 52 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காங்கிரஸ் நாடாளுமன்றக் குழுத் தலைவராக சீதாராம் கேசரியே தெரிவாகலாம் எனப் பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது.

நரசிம்மராவ் ராஜினாமாச் செய்ததை அடுத்து இந்த பதவிக்கு வெற்றிடம் ஏற்பட்டது தெரிந்ததே.

(இ-10)

## வவுனியாவில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு அனுப்பி வருட ஆரம்பத்தில் மீண்டும் பாடசாலைகளைத் திறக்க ஒழுங்குகள் செய்துதருவதாகப் புனர்வாழ்வு அதிகாரசபை வாக்குறுதி அளித்திருந்தது.

ஆனால் இந்த வாக்குறுதி காப்பாற்றப்படாததால் நேற்று வவுனியாவில் முக்கிய பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

மேலும் பொது நிர்வாக அமைச்சு சுற்றறிக்கை 44/90 இன் பிரகாரம் பல பாடசாலை அதிபர்கள் ஓய்வு விண்ணப்பங்களைச்சமர்ப்பித்துள்ளதால் பாடசாலைகளின் பணிகள் பாதிப்படைந்துள்ளன.

(இ-10)

## தெரிவுக் குழுவில்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யே சனையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முன்னர் சர்வஜன வாக்கெடுப்புக்கு விடுவது தொடர்பாக அரசாங்கம் இன்னும் தீர்மானம் எடுக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

எனினும் நாட்டின் சுபீட்சத்தைத் தீர்மானிக்கக்கூடிய முக்கிய விவகாரம் தொடர்பாக தங்களது கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு பொதுமக்களுக்குச் சந்தர்ப்பமளிக்கும் வகையில் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதற்கான அதிகாரம் அரசமைப்பின் 87 ஆவது பிரிவின் கீழ் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதில் இந்த ஆண்டில் பெரும் முன்னேற்றம் காணப்படுமென்றும் —

1997 விவாதங்களின் ஆண்டாக இருக்காது; செயல்படுத்துகின்ற ஆண்டாக — முடிவெடுக்கின்ற ஆண்டாக — இருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-5)

## யாழ் கிழக்கில் படைநடவடிக்கை பூர்த்தி

கொழும்பு, ஜன. 3

யாழ்ப்பாணத்தின் கிழக்குப் பகுதியில் படையினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கை பூர்த்தியாகிவிட்டதாக கொழும்பில் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

நாகர்கோயிலைப் படையினர் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்துள்ளனர் என்றும்—

ஏராளமான வெடிப்பொருள்கள் கைப்பற்றப்பட்டன என்றும்— அந்த அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

(இ-3-150)

## கிளைமோர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேர் உயர்தர வகுப்பு மாணவர்கள் ஆவர்.

கொலையுண்ட பொதுமக்கள் மூவரின் சடலங்களும் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.

காயமடைந்த நான்கு பொதுமக்களும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில் கொல்லப்பட்ட மூன்று பொதுமக்களின் பெயர் விவரம் வருமாறு:-

மல்லாகம் கோட்டைக்காட்டைச் சேர்ந்த பேரம்பலம் ஸ்ரீநிவாசன் (வயது 19), அதே இடத்தைச் சேர்ந்த தம்பிராசா பிரதீசன் (வயது 18), சுன்னாகம் சூராவத்தையைச் சேர்ந்த சின்னர் முருகையா (வயது 41)

ஸ்ரீநிவாசன், பிரதீசன் ஆகிய இருவரும் மல்லாகம் இந்துக் கல்லூரியின், ஜி.சி.ஈ உயர்தர வகுப்பு முதலாண்டு வர்த்தகப் பிரிவு மாணவர்களாவர். கொழும்பு செல்வதற்காகப் பதிவு செய்த இவர்கள் பயண இலக்கம் பார்ப்பதற்காக யாழ்ப்பாணம் நோக்கி வந்தவர்கள் என்று அறியப்படுகிறது.

முருகையா கொழும்பு செல்லும் உறவினரை வழியனுப்ப வந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்தில் காயமடைந்தோர் விவரம் வருமாறு;-

திருமேனி மீனாம்பிகை (சூராவத்தை-வயது 43), திருமேனி கேசவன் (சூராவத்தை-வயது 17), சின்னத்துரை சக்திவேல் (உடுவில் - வயது 40 - யாழ். கட்டடத் திணைக்கள களஞ்சியப் பொறுப்பாளர்), சிதம்பரி சுப்பிரமணியம் (இணுவில் - வயது 47)

காயமடைந்த திருமேனி மீனாம்பிகை சம்பவத்தில் இறந்த முருகையாவின் மைத்துனியாவார்; காயமடைந்த கேசவனின் தாயாரும் ஆவார்.

(அ- 15-5)

## முல்லைத்தீவில் மலேரியா பரவுகிறது

முல்லைத்தீவு மாவட்டத்தில் எதிர்பாராத விதமாக மலேரியா, மூளை மலேரியா, வைரஸ் காய்ச்சல் ஆகிய நோய்கள் பரவ ஆரம்பித்துள்ளன.

கடந்த மாதம் புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளில் 53 நோயாளிகள் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டு இறந்ததாக முல்லைத்தீவு அரசாங்க அதிபர் தர்மகுலசிங்கம் தெரிவித்தார்.

முல்லைத்தீவுப் பகுதியில் மருந்துவகைகளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடும்—

மருத்துவர்கள் மற்றும் ஏனைய ஊழியர்கள் போதிய அளவு இல்லாமையுமே— நோய்கள் பரவுவதற்கும், மக்கள் இறப்பதற்கும் காரணம் என முல்லைத்தீவு அரச அதிபர் தெரிவித்தார்.

## இராமேஸ்வரத்தில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வித்தார்.

இந்த உண்ணாவிரதம் பற்றி இராமேஸ்வரத்தில் உள்ள பத்திரிகையாளர் விஸ்வநாதன் பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டி வருமாறு:-

கேள்வி:- இந்த உண்ணாவிரதத்தால் ஏதாவது பலன் கிடைக்கப் போகிறதா?

பதில்:- இலங்கைக் கடற்படையைக் கண்டித்து நடத்தப்படும் இந்த உண்ணாவிரதத்தை மீனவர்கள் வரவேற்றுள்ளனர். ஆனால் இந்த உண்ணாவிரதத்தால் எந்தப் பலனும் ஏற்படப் போவதில்லை.

கேள்வி;- மீனவர்கள் ஏதாவது நடவடிக்கை எடுக்கப் போகிறார்களா?

பதில்:- மீனவர்கள் இம்மாதம் 7 ஆம் திகதி வரை பொறுத்திருப்பார்கள். அதற்குப் பிறகு ரயில் மறியல், சாலை மறியல் என்ற போராட்டங்களில் இறங்கவும் சென்னை, கோட்டை முன்பு உண்ணாவிரதப் போராட்டம் நடத்தவும் திட்டமிட்டுள்ளனர். புதுடில்லி நாடாளுமன்றத்தின் முன் போராட்டம் நடத்தவும் உத்தேசித்துள்ளனர்.

கேள்வி: இலங்கைக் கடற்படை தமிழ்நாட்டு மீனவர்களுக்கு எதிராக இவ்வளவு நடவடிக்கை எடுத்தும் கூட தமிழ்நாட்டு அரசோ, மத்திய அரசோ ஆக்கபூர்வமாகச் செயற்படாததற்கு என்ன காரணம்?

பதில்:- இராமேஸ்வரம் கடற் பகுதியில் கடந்த சில மாதங்களாகக் கள்ளக் கடத்தல் பெருமளவில் நடந்து வருகின்றது. இந்தக் கள்ளக் கடத்தல் தான் இலங்கைக் கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு முக்கிய காரணமாயுள்ளது. இராமேஸ்வரத்தில் கிடைக்கும் பொருள்கள் விடுதலைப் புலிகளுக்குக் கிடைக்காவிட்டால்புலிகளின் கை ஓங்குவது குறைந்துவிடும் என்று இலங்கை அரச தரப்பில் நம்பப்படுகின்றது. ஆனால் மீனவர்கள் எல்லையைத் தாண்டி மீன் பிடிப்பதை விட்டபாடில்லை. இலங்கைக் கடற் பகுதியில் தான் இறால் உள்ளது.

கச்சதீவு ஒப்பந்தப்படி இலங்கைக் கடற் பகுதியில் மீன் பிடிக்கலாம் என்று இவர்கள் கூறுகிறார்கள். ஆகவே இந்த விடயத்தில் தமிழக அரசும், மத்திய அரசும் எந்த முடிவும் எடுக்காமல் இருந்து வருகின்றன.

(இ-5)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03 - 01 - 1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்ற .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org